Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆனி 21 ஆம் நாள் முஹர்ரம் 21 (5-7 61) புதன்கிழமை இதழ் 121

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானுல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்.
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

## முதல் தடவையில்

# ஜி. ஸி. ஈ. பரீட்சையில்

# தேருத மாணவர்

### கல்லூரிகளிலிருந்து வெளியேற்ற கல்வி டைரக்டர் உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் ஒருமுறைதான் தோற்றமுடியும் என்றும் சோதனையில் சித்தி பெருத மாணவர்கள் கல்லூரிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்றும் கல்வி டைரக்டர் சகல கல்லூரி அதிபர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

## பிரதமர், நிதிமந்திரியுடன் திரு. தோர்னி கிராப்ட் மகாநாடு

### வெள்ளிக்கிழமை இங்கிருந்து புறப்படுவார்

கொழும்பு, செவ்வாய்

பிரிட்டிஷ் விமான மந்திரி திரு. பீட்டர் தோர்னி கிராப்ட் இன்று பிற்பகல் இலங்கை வந்து சேர்ந்தார். கட்டுநாயகா விமான நிலையத்தில் அவரை அதிகாரிகள் வரவேற்றனர்.

இன்று அவர் பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, நிதி மந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன ஆகியோருடன் ஒரு மகாநாடு நடத்தினர்.

திரு. தோர்னிகிராப்ட் வெளிநாட்டிலாகாவின் அதிகாரிகளுடனும் இதர மந்திரிகளுடனும் அடுத்து சம்பாஷணை நடத்தவிருக்கிறர். இன்று அவர் கவர்னர் ஜெனரலைச் சந்தித்தார். நாளை அவர் செனட் தலைவரைச் சந்திப்பார்.

வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் மந்திரி இலங்கையை விட்டுப் புறப்படுவார்.

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வது பற்றி சாம்ராஜ்ய நாடுகளின் கருத்தை அறியும் பொருட்டு திரு. தோர்னி கிராப்ட் இலங்கை வந்திருக் கிறர்.

## மாநகரசபை இடைத் தேர்தல்

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு மாநகரசபையின் கறுவாக்காடு தொகுதிக்கான இடைத்தேர்தலில் இரு அபேட்சகர்கள் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். திரு. ஆர். பிரேமதாஸ, திரு. ஜே. பி ரத்னம் ஆகிய இருவருமே இத்தொகுதியில் போட்டியிடுகிறர்கள். ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் இத் தேர்தல் நடக்கும்.

## கைதிகளின் நிவாரண பணம் உயரும்

கொழும்பு, செவ்வாய்

சிறைக் கைதிகளுக்கு மாதம் ரூ. 2. 50 நிவாரணப்பணமாகக் கொடுபட்டுவந்த தொகையை 20 ரூபாவாகக்கூட்ட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப்பணம் கைதிகளின் குடும்பங்களுக்கு கஷ்ட நிவாரணப் பணமாகக் கொடுக்கப் படும் எனத் தெரிகிறது.

## "ஊழியர்கள் அரசாங்கத்துக்கு விஸ்வாசமாய் இருக்க வேண்டும்"

### பிரிவுபசாரவிருந்தில்திரு.ராஜு குமாரசுவாமிபேச்சு

கொழும்பு, செவ்வாய்

"முன் இருந்த அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருந்த அரசாங்க உத்தியோகஸ்தரை ஆட்சியில் உள்ள அரசாங்கம் சந்தேகிப்பது இந்த நாட்டில் நிலவிவரும் வழக்கமாக இருந்திருக்கிறது" என திரு. ராஜு குமாரசுவாமி தெரிவித்தார்.

திரு. ராஜு குமாரசுவாமி ஐ. நா. ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றச் செல்வதையொட்டி அவரது அபிமானிகள் நேற்று கால்பேஸ் ஹோட்டலில் நடத்திய பிரிவுபசார விருந்தின் போதே திரு. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:—

"அரசாங்க ஊழியர்கள் நாட்டின்மீது விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எனவே எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் அந்த அரசாங்கத்தோடு அவர்கள் விசுவாசமாக நடந்துகொள்வது அவசியமாகின்றது.

இலங்கை அரசாங்கசேவை மற்றைய நாட்டு அரசாங்க சேவைபோன்று நல்லநிலையில் இருந்துவருகின்றது. இலங்கையில் அரசாங்க சேவை எவ்வளவு முக்கிய சேவை புரிகின்றதென்பதை மக்கள் பூரணமாக உணரவில்லை."

திரு. வில்மட் பெரேரா தமது நன்றியுரையில் கூறியதாவது:

இலங்கை திறமையுள்ளவர்களை இழந்துவருகிறது. பல திறமைசாலிகள் சில விசேஷ உடன்படிக்கைகள் காரணமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகின்றனர் இவர்கள் இங்கேயே தேவைப்படுகின்றனர். வெளிநாடுகளுக்குப் போகும் திறமைசாலிகள் இன்னும் விரிந்த அனுபவம் பெற்று தமது அனுபவங்களை நமது

(5ம் பக்கம் பார்க்க)

# 1964ல் எஃகு உற்பத்தி ஆரம்பமாகும்

## சோவியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் இரும்பு எஃகு உற்பத்தி தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாய் சோவியத் ரஷ்யாவும் இலங்கையும் கைச்சாத்திட்டன. இரும்பு எஃகு உற்பத்தித் திட்டத்தின் முதலாம் கட்டத்திற்கான இந்த ஒப்பந்தத்தின் கீழ் வருடம் ஒன்றுக்கு 35,000 டன் உருக்கு உற்பத்தி செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான செலவு 32.6 லட்சம் ரூபாய். ரஷ்யாவின் 142 லட்ச ரூபாய் கடன் உதவியிலிருந்து இது வழங்கப் படும்.

வட்டியுடன் இக்கடன் 12வருடத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

அடுத்த 3 மாதத்தில் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பான என்ஜினியர் இலங்கை வந்துசேர்வார். இது சம்பந்தமான ஆரம்ப வேலைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

இலங்கை என்ஜினியர்களை ரஷ்யாவுக்கனுப்பி பயிற்சியளிக்கவும் இவ்வொப்பந்தம் வழி செய்கிறது. ஆரம்பத்தில் இவர்கள் இந்திய எஃகு ஆலைகளில் பயிற்சிபெறுவார்கள்.

1964ம் ஆண்டு நடுப்பகுதியில் உற்பத்தி ஆரம்பமாகும்.

திட்டத்தின் 2ம், 3ம் கட்டத்தை நிறைவுபடுத்துவதற்கான ஆயத்தங்கள் செய்யப் பட்டுவருகின்றன.

மோட்டார் டயர்கள் உற்பத்தி சம்பந்தமான உடன்படிக்கையும் சீக்கிரம் செய்யப் படும்.

## பென்ஷன் பணம் அனுப்பத்தடை!

கொழும்பு, செவ்வாய்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பென்ஷன்காரர்களிக்கு பென்ஷன் அனுப்பக்கூடாதென இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது.

## இலங்கையிலிருந்து இரு ஸ்தானிகர்கள்

கொழும்பு, செவ்வாய்

முன்னர் நவசீனவில் இலங்கை ஸ்தானிகராகக் கடமையாற்றிய திரு. டபிள்யு. கோபல்லாவ பிரான்ஸில் இலங்கை ஸ்தானிகராகப் பதவி ஏற்பதற்காக இன்று விமான மூலம் பயணமானர்.

திரு. சுபசிங்கா மாஸ்கோவிற்கு இலங்கை ஸ்தானிகராகக் கடமையாற்றச் சென்றுள்ளார்.

## "ஜாக்பொட்" மீது நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

"ஜாக்பொட்" மிஷின்களை வைத்துப் பணம் சம்பாதிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு உள்நாட்டு அமைச்சு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறது.

## முதலாளிகளுக்கு அபராதம்

கொழும்பு, செவ்வாய்

ஊழியர்கள் சேமலாப நிதிக்குத் தங்கள் பங்கை அனுப்பத் தவறிய முதலாளிகளுக்கு மொத்தம் 9900 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

## 3 துறைகளில் ஊக்கமளிப்பதே அரசாங்கத்தின் கொள்கை

### மந்திரி திரு. இலங்கரத்ன விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

வர்த்தகத்தைப் பொறுத்தவரை 3 துறைகளில் ஊக்கமளிப்பதே அரசாங்கத்தின் கொள்கையென வர்த்தக மந்திரி திரு. டி. பி இலகங்ரத்ன கூறினர்.

"அரசாங்கம், கூட்டுறவுச் சங்கங்களைப் போன்ற மக்கள் ஸ்தாபனங்கள், தனியார் துறை ஆகிய மூன்றுக்கும் நாங்கள் ஊக்கமளித்துவருகிறோம். ஏமாற்றும் வர்த்தகர்களைப் பொறுத்தவரை அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இம்மூன்று வழிகளையும் பயன்படுத்தி அது சமூகத்திற்கு தன்பொறுப்புகளை நிறைவேற்றும். இதன்மூலம் நியாய விலைக்கு தரமான சாமான்கள் கிடைக்க வழி ஏற்படும்" என்றும் அவர் கூறினர்.

# கல்லோயாவில் 'புயல்' ஓய்ந்தது

### மந்திரி விஜயத்தின் எதிரொலி

அம்பாறை, செவ்வாய்

கல்ஓயா பள்ளத்தாக்கில் ஏற்பட்டிருந்த குழப்பகரமான நிலைமை முடிந்துவிட்டதென கல்ஓயா சபையின் ஸ்தல மானேஜர் திரு. நெவில் ஜயவீரா கூறினர். கல்ஓயா சபையின் எதிர்காலம்பற்றி அவசரப்பட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாது என அவர் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு அறிவித்தார். மந்திரி திரு. ஜயசூரியாவின் விஜயம் நிலைமையைத் தெளிவாக்கி விட்டதென்றும், நிரந்தர மந்திரி திரு. ஸி. பி. டி சில்வா திரும்பும்வரை இது பற்றி எதுவும் செய்யப்படமாட்டாதென்று உத்தரவாதமளிக்கப்பட்டதாயும் திரு. ஜயவீரா தொழிற்சங்கத்தலைவர்களுக்கு அறிவித்தார்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.


## திருமண அழைப்பு

**சுந்தரலிங்கம் — பராசக்தி**

சாவகச்சேரி திரு. இ. வீரசிங்கம் தம்பதிகளின் மகனும் திரு. க. குமாரவேலு தம்பதிகளின் (ஹாமர்ஸ் அவென்யூ, வெள்ளவத்தை) மருமகனுமாகிய **செல்வன் சுந்தரலிங்கம்** (இலங்கை வானொலி) அவர்களுக்கும், யாழ்ப்பாண சிறும்பியடி திரு. செ. ஐயாத்துரை (இராசையா) தம்பதிகளின் மகளும் திரு. வ. துரையப்பா (கிருன் ஹோட்டல் யாழ்ப்பாணம்) திருமதி துரையப்பா ஆகியோரின் மருமகளுமாகிய **செல்வி பராசக்தி**(ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களுக்கும் 9-7-61 ஞாயிற்றுக் கிழமை காலை 10-30க்கும் 11-30க்குமிடையில் வரும்சுப முகூர்த்தத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் நடைபெறும். அன்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

### யாழ் வர்த்தக ஊழியர் சங்கம்

## லிகிதர் தேவை

சம்பளமும் கமிஷனும் கொடுக்கப்படும் யாழ்ப்பாண பட்டண எல்லைக்குள் வசிக்கிறவராக இருத்தல் வேண்டும். 8-7-61க்கு முன்னதாக கீழ்க்கண்ட விலாசத்திற்குவிண்ணப்பிக்கவும். தலைவர், யாழ். வர்த்தக ஊழியர் சங்கம், 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

கெஷியர், குமாஸ்தா, இன்ஸ்பெக்டர்களும், ஏஜென்ஸிகளும் தேவை. பெண் வயது—18க்குமேல், ஆண் வயது—21க்கு மேல். அகில இலங்கை பெனிவிட் இன்சூரன்ஸ் கம்பனி, 33A, மேல்மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

A50 கேம்பிறிஜ் (Cambridge) EN 7000 தொடர்பிலக்கமுள்ள கறுப்பு நிறமான கார் நல்ல நிலைமையிலிருக்கிறது. விலை ரூ. 7000-00த்திற்குமேல். காரை காலையிலும் மாலையிலும் பார்வையிடலாம். 15A, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.

### காணவில்லை

ஆறுமுகம் வேலாயுதம் என்ற 22 வயதுள்ள பையன் கடந்த 11 நாட்களாகக் காணவில்லை. காணுமல் போன நேரத்தில் அவர் ஒரு சாரம் கட்டியும் தோழில் துண்டு ஒன்றும் போட்டிருந்தார். பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இனாம் வழங்கப்படும். ஆறுமுகம், மருதங்கேணி, (ஆஸ்பத்திரியடி) என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும்.

## NOTICE

In the District Court of JAFFNA.

No. P. 485

Arjuna Augustine Virasingha of Jaffna, presently of Colombo.

*Plaintiff.*

Vs.

1. Rajaratnam Kanagasooriam and wife
2. Mercy Florence Sampooranam Kanagasooriam, both of Chundicully, Jaffna.

*Defendants.*

It is hereby notified that action No. P. 485 has been instituted in the District Court of Jaffna under the Partition Act No. 16 of 1951 for the partition / sale of the land called Vilanai Ponninra Vilanai Mailapulam Nunkiyavudai Velalavathai and Nunkiyavudai in extent 239 Lms. V.C. and 10, 5/8 kls. situated at Chankanai in Valikamam West Division Jaffna District.

The defendants in this action were summoned to appear in Court on the 23rd day of March 1961 and they have, not filed answer.

This case will be called on the 7th day of August 1961 at 10 O'Clock in the forenoon for proof of this publication and for fixing of ex-parte hearing.

Jaffna, this 3rd day of July 1961.

By order of Court,
(G. A. V. Pillainayagam)
*Secretary.*

## குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை மக்கள் அறிந்திருக்கவேண்டும்

யக்கலை, செவ்வாய்

குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப்பற்றியும் மக்கள் தெரிந்திருக்கவேண்டும். கிராம அபிவிருத்தி நிலையங்களிலும், மகிலா சமித்தி சபைகளிலும் குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை வழிமுறைகளைப் பற்றிய வகுப்புகளை அரசாங்கம் நடத்தவேண்டும் என்ற தீர்மானம் கிறிண்டவல பகுதி கிராம அபிவிருத்தி நிலையம், மகிலா சமித்தி மத்திய ஸ்தானங்களின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. திரு. டி. ஜி. சேனரெட்ணி தலைமை தாங்கினர்.

இதனைப் பிரேரித்த திரு. டி. ஜி சேனரெட்ணி பேசும்போது மக்கள் மோக நோய்களைப்பற்றித் தெரிந்துகொள்வதோடு முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாடுகளிலும், பிரிட்டனிலும் இப்பிரச்சினைகளைத் தீர்க்கக் கையாளும் வழிவகைகளையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொள்ளை லாபம் அடிப்பவர்களை

## கண்காணிக்க திடீர் பரிசோதனை

கொழும்பு, செவ்வாய்

கொள்ளை இலாபம் அடிக்கும் வர்த்தகர்களைக் கண்காணித்து அவர்களுக்குத் தடை விதிப்பதற்காகக் கொழும்பிலுள்ள விலை கட்டுப்பாட்டுத் தலைமைக் காரியாலயத்திலிருந்து சில அதிகாரிகளைத் திடீர் பரிசோதனைக்காக மாகாணங்களுக்கு அனுப்புமாறு வர்த்தக உணவுமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின தமது நிரந்தரக் காரியதரிசியிடம் கூறியுள்ளார். கொள்ளை இலாபம் அடிப்பவர்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பதுபற்றித் தமது இலாகா அதிகாரிகளுடன் நடத்திய மகாநாட்டின் பின்னரே அமைச்சர் இதனை நிரந்தரக் காரியதரிசிக்குத் தெரிவித்தார். தலைமைக்காரியாலய அதிகாரிகள் எவராவது கொள்ளையடித்ததாகக் கண்டுபிடித்தால் அம்மாகாணத்திற் கடமையாற்றும் அதிகாரிகளுக்கு அது இழுக்காகுமென உணவு விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும் நிரந்தரக் காரியதரிசியை மந்திரி கேட்டுக் கொண்டார்.

உணவுப் பொருள் விலைக்கட்டுப்பாட்டையும் உணவு இலாகாவையும் திருத்தியமைப்பது தமது நோக்கமென நிரந்தரக் காரியதரிசிக்கு அவர் கூறினர். வர்த்தகஇலாகாவும் இவ்வாறு கொள்ளையலாம் அடிப்பவர்களுக்கும் உணவுப் பொருள்களைப் பதுக்குவோர்களுக்கும் அதிக தண்டனையை நீதிமன்றம் விதிக்கக்கூடிய முறையில் சட்டத்தை மாற்றுவது பற்றி யோசித்து வருவதாகவும் தெரியவருகிறது.

காய்கறி விற்பனைப் பகுதியையும் திருத்தி அமைக்குமாறு விற்பனை இலாகாவுக்கு திரு. இலங்கரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## பங்களூர் கடிகாரங்கள்

### அடுத்த மாதம் விற்பனைக்கு வரும்

பங்களூர், ஜூலை 4

பங்களூர் கடிகாரத் தொழிற்சாலையில் முதன் முதலாக உற்பத்தி செய்யப்பட்ட கடிகாரங்கள் அடுத்த மாதம் விற்பனைக்குவரும். இக் கடிகாரங்கள் 100 ரூபாய்க்கு குறைவாக இருக்கும். முதல் வருடத்தில் சுமார் மூன்று இலட்சம் கடிகாரங்கள் உற்பத்தியாகும். முதல் வருடத்தில் உற்பத்தியாகும் கடிகாரங்கள் 54 சதவிகிதம் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட உறுப்புக்களைக் கொண்டதாக இருக்கும். இரண்டாவது வருடத்தில் 64 சதவிகித இந்திய உறுப்புக்களையும் மூன்ருவது வருடத்தில் 72 சதவிகித இந்திய உறுப்புக்களையும் நான்காவது வருடத்தில் 84 சதவிகித இந்திய உறுப்புக்களையும் கொண்டிருக்கும்.

## 'கட்டடத்தை எடுத்துத் தருக'

### கல்விப்பகுதிக்கு முறையீடு

யாழ்ப்பாணம், புதன்

வண்ணர்பண்ணை நாவலர் வித்தியாசாலையின் ஒரு பகுதியை இப்பாடசாலையின் முன்னுள் முகாமையாளர் திரு. வி. முத்துக்குமாரு உலாந்தா ஒருவருடன் பாடசாலைக்குள் சென்று அளவிட்டுப் போனதாகச் சொல்லப்படுகிறது. இது, சம்பந்தமாக இப்பாடசாலைத் தலைமையாசிரியர் கல்விப்பகுதிக்கு முறைப்பாடு செய்துள்ளாரெனவும் தெரியவருகிறது. முன்னர் வகுப்புகள் நடைபெற்றுவந்த இக் கட்டடத்தை மீண்டும் எடுத்துத் தருமாறும், அதில் கேட்கப் பட்டுள்ளது.

பாடசாலைப் பூட்டை உடைத்து வகுப்புகள் நடைபெற்றுவந்த கட்டிடத்தின் ஒரு பகுதியை எடுத்துள்ளதாகவும் முட்கம்பிவேலி இட்டதாகவும் மின்சாரக் கம்பியைத்துண்டித்ததாகவும் தலைமையாசிரியர் புகார் செய்துள்ளார். இதன் பிரதிகள் பொலிசுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாம்.

### கண்டி விவசாய கமிஷன்

## சிபார்சுகளை ஆராய ஒரு சபை

கண்டி, செவ்வாய்

கண்டி விவசாய கமிஷனின் சிபார்சுகளை எவ்வளவு தூரம் செயற்படுத்த முடியும் என்பதைப்பற்றி ஆராய்வதற்கு விரைவில் ஒரு சபையை அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது.

இக்கமிஷனின் அலுவல்கள் யாவற்றையும் தனது அமைச்சின்கீழ் கொண்டுவருவதற்கு வீடமைப்பு, தொழில், கலாச்சார விவகார மந்திரி அரசாங்கத்திடம் இருந்து அனுமதி பெற்றுள்ளார்.

கல்லோயா அபிவிருத்திச்திட்டச்சபையைப்போல் ஒரு சபையை நிறுவுவதற்கு மந்திரிவிரும்பவில்லை. மேலும் கண்டி விவசாயக் சமிஷனன் ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கவிருக்கும் தெருக்களின் செலவுகளை ஒரு தனிப்பட்ட பகுதியிற் கொண்டுவரவும் ஆவனசெய்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வித்தியாகந்தோருக்கு குமாஸ்தாக்கள் போதாது

கேகாலை, செவ்வாய்

கேகாலையில் உள்ள வித்தியா கந்தோரில் அதிகமான ஊழியர்கள் தேவைப்படுகின்றனர் என போக்குவரத்து மந்திரி திரு. பி. பி.ஜி. கலுகல்ல வலியுறுத்தியுள்ளார்.

உடனடியாகவே இரத்தின புரியில் இருந்து கேகாலைக் காரியாலயத்திற்குப் பத்துக் குமாஸ்தாக்களை மாற்றவேண்டுமென்றும், இதற்குத் தகுந்தபடி உபபணியாளரும் தளபாடங்களும் காரியாலயத்திற்குத் தேவை எனவும் அவர் வித்தியாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.


## விரைவில் வெளிவரும்

# ஈழநாடு

EELA NADU

### வாரப் பதிப்பு

★

**ஈழநாடு** வாரப் பதிப்பில் வெளியிடுவதற்குச் சுவையான சிறு கதைகள், இலக்கியம், கலை, கல்வி, விஞ்ஞானம், பொருளாதாரம், கைத்தொழில்-விவசாயம், சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமான கட்டுரைகளை அன்பர்கள் அனுப்பி வைக்கலாம். பிரசுரமாகும் கதைகள், கட்டுரைகளுக்குச் சன்மானம் அளிக்கப்படும்.

தாளில் ஒரு பக்கத்தில் எழுதவேண்டும். பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளாதவற்றைப் பெற விரும்புவோர் அவற்றுடன் போதிய தபால் முத்திரை அனுப்பி வைக்கவேண்டும்.

கார்ட்டூன் படங்கள் வரைவதில் அனுபவமுள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

63, சிவன் கோவில் மேலை வீதி,
தபாற் பெட்டி எண்: 49
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்,
ஈழநாடு.



# கேரளத்தில் கடும்மழை; ஆறுகள்பிரவாகம்

## நிலச்சரிவில் 13 பேர் மாண்டனர்

### வீதிகள் வீடுகள் சேதம்

திருவனந்தபுரம், ஜூலை 4
கேரளத்தில் மூன்று ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

சென்ற ஞாயிற்றுக் கிழமை திருச்சூரில் ஏற்பட்ட நிலச்சரிவில் மொத்தம் 13 பேர் மாண்டனரென்று தாமதித்துக் கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

கேரள ராஜ்யத்தின் வட பகுதிக்கும் எர்ணு குளத்துக்கும் இடையில் உள்ள சாலைகளில் வெள்ளம் நிற்பதால் போக்கு வரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. பிரயாணிகள் சில இடங்களில் படகுகள் மூலம் கொண்டு செல்லப் படுகின்றனர். தந்தி; டெலிபோன் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

பெரியாறு அணைக்கட்டில் நீர் மட்டம் அதிகரித்து விட்டதால் மின்சார இயக்கம் நிறுத்தப்பட்டுவிட்டது. நிலைய இயந்திரத்துக்கு பழுது ஏற்படாமல் தடுப்பதற்கு ராஜ்ய என்ஜினியர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

அபாயம் ஏற்படக் கூடிய முக்கிய இலக்குகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருச்சூரில் வெள்ளத்தினல் மூவர் மாண்டனர்.

சென்ற பதினைந்து வருட காலத்தில் இது போன்ற மோசமான வெள்ளப் பெருக்கு கேரளத்தில் ஏற்பட்டதில்லையென்று கூறப்படுகிறது

தாழ்ந்த பகுதிகளிலுள்ள பல குடும்பங்கள் தங்கள் வீடு வாசல்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றுள்ளன. நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன.

**பம்பாயில் புயலும் மழையும்**

பம்பாயில் நேற்று கடும் மழையும் புயலும் வீசியது. போக்குவரத்துச் சேவை துண்டிக்கப்பட்டது.

**கோயம்புத்தூரில் கடும் மழை**

கோயம் புத்தூரில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நேற்று மூவர் மாண்டனர். மற்ருெருவர் மண் சரிவினல் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

## நெல் வாங்க மேலும் அதிக நிதி

கொழும்பு, செவ்வாய்
உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெல் வாங்குவதற்காக மேலும் 75,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல் வாங்குவதற்கு மேலும் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதால் நெல் உற்பத்தியாகும் பகுதிகளில் உற்பத்தியாளர்களிடம் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெல் வாங்கும்படி அரசாங்க அதிபர்களுக்கு நெல் கொள்வனவு செய்யும் அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் 1960-61ம் வருடத்தில் நெல் வாங்குவதற்கென முன்பு 250,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இத்தொகை 325,000,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## போர்த்துக்கலுடன் ராஜீய உறவு முறித்துக்கொள்ள இந்தோனேஷியா முடிவு

ஜாகர்த்தா, ஜூலை 4
அங்கோலாவில் போர்ச்சுக்கல் செய்து வரும் கொடுமைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாகபோர்ச்சுக்கலுடனுள்ள இராஜீய உறவை முறித்துக் கொள்ள இந்தோனேஷிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. லிஸ்பனிலுள்ள இந்தோனேஷிய தூதரை இந்தோனேஷிய திருப்பி அழைத்துக் கொள்ளும்.

அங்கோலாவில் போர்ச்சுக்கல் செய்யும் அட்டூழியங்களைக் கண்டித்து இந்தோனேஷிய பார்லிமெண்ட் நேற்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

"இந்தோனேஷிய மக்கள் அங்கோலாவில் சுதந்திரத்துக்காகப் போராடும் அங்கோலா மக்களுக்கு போர்ச்சுக்கல் செய்யும் அக்கிரமங்களை அறிந்து கோபங்கொண்டுள்ளனர். இந்தோனேஷிய மக்களின் கோபம் உச்ச நிலையை அடைய முன்னர் அங்கோலா மக்கள் விஷயத்தில் போர்ச்சுக்கல் தனது போக்கை மாற்றிக் கொள்வதற்கு போர்ச்சுக்கலுடன் நேச உறவு கொண்டாடும் பிரிட்டன் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி எச்சரித்தார்.

"அங்கோலா மக்கள் சுதந்திரத்துக்காகப் போராடுகிருர்கள். நியாயமான போராட்டத்தை முறியடிப்பதற்காக ஆயிரக்கணக்கில் மக்களைக் கொன்று குவிப்பது அநியாயம்" என்று அவர் கூறினர்.

**காங்கோ**

### பார்லிமெண்ட் கூடுவதில் மேலும் சிக்கல்

லியப்போல்ட்வில்லி, ஜூலை4
காங்கோ பார்லிமெண்டை மீண்டும் கூட்டுவதற்கு மேலும் சிக்கல்ஏற்பட்டுள்ளதாகத்தெரிகிறது.லியப்போல்ட்வில்லி அரசாங்கத்தின் பிரதம மந்திரி திரு. ஜோசப்இலியோ தமது பதவியை ராஜினமாச் செய்ய மறுப்பதாககூறப்படுகிறது.

தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கு உடன்பாடு ஏற்பட்டாலன்றி பார்லிமெண்ட் கூட்டத்தை மீண்டும் கூட்டுவற்கு தாம் தயாராக இல்லையென்று காங்கோ ஜனதிபதி திரு.கஸாவுபு அறிவித்து விட்டாராம்.

### புயலில் சிக்கிய வத்தை

பருத்தித்துறை, திங்கள்
நாகபட்டினத்திலிருந்து மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்த வத்தையொன்று நடுக்கடலில் புயலில் சிக்கி பாய் மரம் முறிந்த பின்னரும் சுகமாக பருத்தித்துறைக்கரைக்கு வந்து சேர்ந்தது.

1,300 சிமெந்து பாக்கெட்டுகளுடன் சென்ற இந்த வத்தை நடுக்கடலில் அல்லற்பட்ட போதிலும் வத்தைக்கோ அதிலிருந்தவர்களுக்கோ எவ்வித ஆபத்தும் நேரவில்லை.

# 'கல்லோயாசபையை கலைப்பதுபுத்தியாகாது

## தொழிற்சங்கத் தலைவர் கருத்து

கல்லோயா, செவ்வாய்
"விவசாய, காணி, நீர்ப்பாசன தற்காலிக மந்திரி கல்லோயாத் திட்டத்தைப் பார்வையிட்டபின் வெளிவந்துள்ள அறிக்கை கல்லோயா அபிவிருத்தி சபையில் வேலை செய்யும் ஊழியர்களை மிகுந்த திகைப்புக்குள்ளாக்கியிருக்கிறது. அவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றியும் பீதியடைந்துள்ளனர்."

இவ்வாறு கல்லோயாத் தொழிற் சங்க ஐக்கிய முன்னணித் தலைவர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறியதாவது:- ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதியை நிர்வாகச் செலவுக்காகப் பயன்படுத்தப்படுவதாகக் கூறி, சபையைப்பற்றி நடவடிக்கை எடுத்ததும், மக்களிடத்தில் தப்பான அபிப்பிராயம் ஏற்படுத்தியதும் வருந்தத்தக்கது. நிதியில் 12-15 சத வீதம்தான் நிர்வாகத்திற்காகச் செலவு செய்யப்படுகிறது. அரசாங்க அலுவலகங்களுடன் ஒப்பிடும்போது அவை நிர்வாகச் செலவிற்காகக் கல்லோயா சபையிலும் பார்க்க 15-25 சத வீதமான நிதியைச் செலவிடுகிருர்கள். இது பெருமைப்படத்தக்கது அரசாங்க அலுவல்கங்களுடன் ஒப்பிடும் போது சபையானது துரிதமாகப் பணியாற்றிவருகிறது.

கொழும்பில் நடைபெற்ற ஆசிய தூரகிழக்கு நாடுகளுக்கான பொருளாதார விருத்தி ஸ்தாபன மகாநாட்டில் பங்கு பற்றுவதற்கு வந்தவர்கள் கல்லோயா சபையைப் பார்வையிட்டு அதன் தொழில் முன்னேற்றத்தைப் பாராட்டினர்.

வேலைகள் மிகத் துரிதமடைந்துவரும் இவ்வேளையில் கல்லோயா சபையைக் கலைப்பது புத்தியாகாது.

### காமன்வெல்த் நீதிமன்றம்

கோலாலம்பூர், ஜூலை 4
கோலாலம்பூர் வந்துள்ள இங்கிலாந்து தலைமை நீதிபதி பார்க்கர் பிரபு, காமன்வெல்த் நாடுகளுக்கென, காமன்வெல்த் நீதிமன்றம் ஒன்று நிறுவலாம் என்று யோசனை கூறியுள்ளார். காமன்வெல்த் நாடுகளிலிருந்து வரும் அப்பீல்களை விசாரித்து நீதி வழங்குவதுடன். காமன் வெல்த் நொடுகளுடன் ஒரு இணைப்பு ஏற்படுத்திக்கொள்ளவும் இது வகைசெய்யும்என்ருர்.

### பாக் ஜனதிபதி அயூப்கான் இன்று கராச்சி செல்கிருர்

ராவெல்பிண்டி, ஜூலை4
அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் அழைப்பின்மீது ஜனதிபதி கென்னடியைச் சந்திப்பதற்காக இம் மாதம் 7ந் திகதி வாஷிங்டனுக்குப் புறப்படவிருக்கும் பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மாஷல் அயூப்கான் நாளை ராவெல்பிண்டியிலிருந்து கராய்ச்சிக்குப் பிரயாணமாகிருர்.

கராச்சியிலிருந்து 7ந் திகதி புறப்படும் ஜனதிபதி அயூப்கான் லண்டன் சென்று அங்கு மூன்று தினங்கள் தங்கியிருப்பார். லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன், மற்றும் சில மந்திரிகளையும் சந்தித்துப் பேசுவார். இம்மாதம் 11ந் திகதி லண்டனிலிருந்து வாஷிங்டனுக்கு பிரயாணமாவார்.

### மனேஜருக்கு 2 வருடச் சிறை

மட்டக்களப்பு, செவ்வாய்
நெல், ரொக்கம் மற்றும் சில பொருட்களாகவும் மொத்தம் 14,700 ரூபாய்க்கு மோசடி செய்ததாகவும் கணக்குகளைச் சோடித்ததாகவும் குற்றஞ்சாட்டி பள்ளச்சேனை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மனேஜர் கே. கார்த்திகேசு மீது தொடரப்பட்ட வழக்கில் மட்டக்களப்பு நீதிபதி எஸ். தம்பித்துரை எதிரிக்கு இரண்டு வருடக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தார்.

# குவாய்த்-ஈராக் எல்லையில் பிரிட்டிஷ் துருப்புக்கள்

## ஈராக்கிற்கு லிபியா கடிதம்

லண்டன், ஜூலை 4

**குவாய்த்மீது ஈராக் தாக்குதல் நடத்தக்கூடிய ஆபத்து இப்பொழுது இல்லையென்றும் ஆனல் தாக்குதல் நடத்திஞலும் அதைச் சமாளிப்பதற்கு பிரிட்டிஷ் துருப்புக்கள் தயாராக இருக்கின்றனவென்றும் குவாய்த் சென்றுள்ள பிரிட்டிஷ் படைகளின் தளபதி தெரிவித்தார்.**

குவாய்த் ராஜ்யத்தின் நூறுமைல் நீள ஈராக் 'எல்லைக்குச் சமீபத்தில் பிரிட்டிஷ் துருப்புக்கள் ரோந்து புரிந்து வருகின்றன. குவாய்த்மீது ஈராக் தாக்குதல் நடத்தக்கூடிய அபாயம் இப்பொழுது நீங்கிவிட்டதெனிலும் அந்த அபாயம் முற்ருக நீங்கிவிடவில்லை யென்றும் எந்நேரமும் அந்த அபாயம் ஏற்படக்கூடுமென்றும் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கூறினர்.

குவாய்த் ராஜ்யத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு பிரிட்டிஷ் படைகளை அனுப்பியதற்குப் பதிலாக ஐ. நா. படைகள் அனுப்பப்படுவதே சிறந்ததென்று பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் திரு கெயிட்ஸ்கல் தெரிவித்த யோசனை பற்றி பிரதமர் மாக்மிலன் குறிப்பிடுகையில் "அது நல்ல யோசனை தான்" என்ருர். "ஆனல் உடனடியாகச் செய்ய வேண்டிய அலுவல்களை உடனடியாகக் கவனிக்கவேண்டியது அவசியம்" என்று பிரதமர் கூறினர்.

### வெளிவிவகார மந்திரி ராஜிநாமா?

ஈராக் வெளிவிவகார மந்திரி ஜவாத் தமது பதவியை ராஜிநாமாச்செய்வதாக அறிவித்து ராஜிநாமாக் கடிதத்தை பிரதமரிடம் சமர்ப்பித்ததாகவும் ஆனல் ராஜிநாமாக் கடிதத்தை ஏற்றுக்கொள்ள பிரதமர் மேஜர் ஜெனரல் காசிம் மறுத்துவிட்டதாகவும் பெய்ருத்திலிருந்து கிடைத்த ஊர்ஜிதமாகாத செய்தியொன்று கூறுகிறது.

### லிபியா கோரிக்கை

குவாய்த் சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்று லிபியா அரசாங்கம் ஈராக் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

குவாய்த் சம்பந்தமாக ஈராக் எடுக்கும் எந்த நடவடிக்கையும் மத்தியகிழக்கில் கொந்தளிப்பையும் அரபு நாடுகளிடையே பிளவையும் உண்டுபண்ணும் என்று லிபியா எச்சரித்துள்ளது.



### மரண விசாரணை இல்லை

கெட்சும், ஜூலை 4
பிரபல நாவலாசிரியர் திரு ஹெமிங்வேயின் மரணம்பற்றி. விசாரணை நடத்துவதில்லை என்று மரண விசாரணை அதிகாரி தீர்மானித்துள்ளார்.

### விநாயகர் கோயில் மகா கும்பாபிஷேகம்

தோப்புக்காடு, காரைநகர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் பரிவனவிநாயகர் மகர கும்பாபிஷேகம் இம்மாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை தொடக்கம் ஐந்து நாட்கள் வரை நடைபெறும். திங்கட்கிழமை இரவு ஆசிரியர் திரு. வி. க. ஆறுமுகம் 'ஸ்ரீவள்ளி திருமணம் என்பது பற்றிக் கதாப்பிரசங்கம் செய்வார்.

### மணிவாக்கு

அழகுதான் உண்மை. உண்மைதான் அழகு. உலகில் நாம் அறிந்ததெல்லாம் இது தான். அறியவேண்டியதும் இதுவே தான். —கவிஞர் கீட்ஸ்


# ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 21வ (5-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## விலைவாசி உயர்வால் மக்கள் கஷ்டம்

உணவு முதலிய அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசிகள் சென்ற சில வாரங்களாக திடீரென உயர்ந்துள்ளன. இதனால் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து பொது மக்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள்.

இதற்கு யார் காரணம்? சில வர்த்தகர்களே கொள்ளை இலாபம் அடிக்க, பொருள்களைப் பதுக்கி வைத்து, செயற்கைப் பஞ்சம் ஏற்படுத்தி, விலைகளைக் கூட்டுவதாக அரசாங்கம் மதிக்கின்றது. கொள்ளை இலாபம் அடிக்கும் வர்த்தகர்களுக்கு சிறைத் தண்டனை விதிப்பது, பெருந்தொகைகளை அபராதமாக விதிப்பது, வர்த்தக லைசென்ஸுகளை ரத்துச் செய்வது முதலிய கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது பற்றி, பிரதமர் வர்த்தக மந்திரியுடனும், வர்த்தக அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளுடனும் கலந்து யோசனை செய்யத் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இவ்விஷயமாக விரைவில் தக்க நடவடிக்கை எடுத்து, பொது மக்களின் நன்மைகளைப் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் இது சுலபமான காரியமல்ல. இதில் பல சிக்கல்களுண்டு. மொத்த வியாபாரிகளில், சிலர் மறைந்திருந்து மிகத் தந்திரமாகச் செய்யும் காரியங்களால், மார்க்கெட் நிலை குலைந்து, பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு விலைவாசிகள் உயரலாம். சில்லறை வியாபாரிகள் அதிக விலைக்கு சாமான்கள் வாங்கினால் நஷ்டத்தில் விற்க முடியாது. பெரிய பெரிய திமிங்கிலங்கள், கடலுக்கடியில் பதுங்கியிருக்க, அவர்களை விட்டுவிட்டு, சிறிய மீன்களைப் பிடித்துத் தண்டிப்பது பிரச்சினையைத் தீர்க்கவோ, பொது மக்களின் சங்கடங்களைக் குறைக்கவோ உதவாது.

வர்த்தகர்களைக் கேட்டால், தீர்வை உயர்வும், இறக்குமதித் தடைகளுமே, விலைவாசிகள் உயர்வுக்குக் காரணமென்கிறார்கள். இதைப் பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்து, உண்மையை அறிந்து, அவசியமாயின் இத்தடைகளை, பொது மக்களின் நன்மையைக் கருதித் தளர்த்த வேண்டும். இதே சமயம் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் பற்றியும் பல புகார்கள் பார்லிமெண்டிலும் எழுந்தன. சங்கக் கடைகளில் பல சாமான்களும் இல்லாது போவதுடன், பூடு முதலியவை அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் காலிப் பிரதிநிதி சமீபத்தில் பார்லிமெண்டில் எடுத்துச் சொன்னார். இதையும் கவனித்து, அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகம் திறமையாக நடக்கவும், மக்களுக்கு நியாயமான விலைக்குத் தாராளமாகப் பொருள்கள் கிடைக்கவும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

# குவாய்த்தை ஈராக் கைப்பற்றுமா?

## மத்திய கிழக்கில் புதிய நெருக்கடி

— வ. மகாதேவன் —

பாரசீக வளைகுடாவின் மேற்கு ஓரமாக குவாய்த் என்ற சிறிய நாடு இருக்கின்றது. இது மிகவும் முன்னேற்றமடைந்துள்ள நாடு. இந்த நாட்டிற்கு மேற்கேயும் வடக்கேயும் ஈராக் அயல் நாடாக இருக்கின்றது; தெற்கே சாவூதி அரேபியா அயல்நாடாக இருக்கின்றது. குவாய்த்தின் விஸ்தீரணம் 5,800 சதுர மைல். அதாவது, பருமனில் இலங்கையின் காற்பங்கிற்குச் சற்றுக் குறைவான தெனலாம். சனத்தொகை 2,06,177. தலைநகரம் குவாய்த் நகரம். இப்போது ஆட்சிபுரிந்துவரும் மன்னரின் பெயர் ஷாயிக் சேர் அப்துல்லா அஸ்ஸாலிம் அல்சுபா.

உலகில் மண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளுள் தென்னமெரிக்காவிலுள்ள வெனிசுலா முதலிடம் வகிக்கின்றது; குவாய்த் இரண்டாம் இடம் வகிக்கின்றது. உலகில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மண்ணெய் படிவுகளில் 20 சதவீதத்திற்கு அதிகமான அளவு குவாய்த்தில் இருக்கின்றது. பிரிட்டிஷ் – ஐக்கிய அமெரிக்க மண்ணெய் கூட்டுத்தாபனம் 1946 தொடக்கம் மண்ணெய்யை எடுத்துச்சுத்திசெய்து ஏற்றுமதிசெய்து வருகின்றது. 1958 இல் 6,91,00,000 மெட்றிக் தொன் மண்ணெய் குவாய்த்திலிருந்து ஏற்றுமதி செயயப்பட்டது. மண்ணெய் ஏற்றுமதியினால் வருடந்தோறும் 130 கோடி ரூபாவுக்கு அதிகமான வருமானம் இந்நாட்டுக்குக் கிடைக்கின்றது!

### குவாய்த்

இதுவரை தனது பாதுகாப்பிலிருந்த குவாய்த் எனும் சிறிய அரபு ராஜ்யத்துக்கு பிரிட்டன் அரசியல் சுதந்தரமளித்தது. என்றாலும் அங்கு பிரிட்டனுக்குஎண்ணெய் உரித்துக்கள் நீடித்து இருந்து வருகின்றன. அந்த ராஜ்யம் தங்களைச் சேர்ந்ததென்று ஈராக் கூறி அதை கைப்பற்றவே, குவாய்த் மன்னர், பிரிட்டனின் இராணுவ உதவியை நாடினார். அவருக்கு உதவவதுடன் தங்கள் உரித்துக்களையும் காப்பாற்றிக் கொள்ள பிரிட்டன் அங்கு தனது துருப்புகளையும் ஆயுதங்களையும் அனுப்பியுள்ளது.

இதனால் அப்பகுதியில் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாயும், சூயஸ் விஷயமாக பிரிட்டன் எடுத்த நடவடிக்கையைப் போல், குவாய்த் விஷயமாகவும் எடுத்துள்ளதாயும் ஈராக் குற்றம் சாட்டுகிறது. ஈராக்கிலும் பிரிட்டனுக்கு எண்ணெய் உரித்துக்கள் இருக்கின்றன. அதனால் ஈராக்கின் நட்பை பிரிட்டன் இழக்க விரும்பாது. எப்படியாயினும் யுத்தமின்றி சமரசமாக இச்சிக்கலைத் தீர்த்துக் கொள்ள விரும்பும். இவ்விஷயம் ஐக்கியநாடுகள் சபைக்குக் கொண்டுவரப்பட்டபோது ரஷ்யா, பிரிட்டனின் நடவடிக்கையைக் கண்டித்தது. அப்பகுதி எண்ணெயில் ரஷ்யாவுக்கும் கண்ணுண்டாகையால், இதில் வியப்பில்லை.

யுத்தமின்றி இச்சிக்கலை அமைதியான முறையில் தீர்க்க வேண்டியதே முக்கியமாகும். ஐக்கியநாடுகள் சபையும், அரபு நாடுகளும், இந்தியாவும் கூட இதே நோக்கத்துடன் முயற்சி செய்வதால், இது சுமுகமாகத் தீருமென்றே எதிர்பார்க்கலாம். ஆனால் அந்த எண்ணெய் லாபத்தால் கிடைக்கும் செல்வம், இனி அதிகமாக அரபு மக்களுக்குப் பயன்பட வேண்டியதாய் இருக்கும்.

பல அராபிய நாடுகளில் மண்ணெய் வழியாகக் கிடைக்கும் வருமானத்தை மன்னர்கள் பெரிய மாளிகைகளைக் கட்டுவதிலும், விலையுயர்ந்த மோட்டர் வாகனங்களை வாங்கி உல்லாசமாகப் பவனிவருவதிலும் வீணாகச் செலவு செய்து வருகின்றார்கள். ஆனால் குவாய்த்தின் மன்னர் தமது நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், கிடைக்கும் வருமானத்தைக் கடந்த 15 வருடகாலமாகச் செலவு செய்து வந்திருக்கிறார். மக்களுக்கு இலவசக் கல்விமுறையும் இலவச வைத்திய சேவை முறையும் கிடைத்திருக்கின்றன. வெளிநாடுகளில் கல்வி பயில்வதற்காகச் செல்லும் குவாய்த் மாணவர்களுக்கு உபகாரச்சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. பாலைவனத்தை அடுத்திருக்கும் இவ்வரண்ட நாட்டில் குடிதண்ணீர் விநியோகிப்பதற்குத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மின்சார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மின்சார ஒளி பிரகாசிக்கும் நவீன வீதிகளும் புதிய அழகிய கட்டடங்களும் நாட்டை அலங்கரிக்கின்றன. ஏனவே ஒரு 'சுவர்க்க' நாடாகியுள்ள குவாய்த் ஏனைய அராபிய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றதெனக் கூறுவது மிகையாகாது.

### பிரிட்டனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம்

1898இல் துருக்கி குவாய்த்தைக் கைப்பற்றுவதற்கு எத்தனித்தபோது குவாய்த் மன்னர் பிரிட்டனின் பாதுகாப்பை நாடினார். இதன் விளைவாக 1899 இல் ஆங்கில-குவாய்த் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி குவாய்த் பிரிட்டனின் பாதுகாப்பு நாடாகியது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அனுமதியின்றி குவாய்த்தின் எந்த நிலப்பகுதியையும் பிறநாடுகளுக்கு வழங்குவதில்லை என்றும், பிற நாடுகளின் தூதுவர்களை நாட்டில் அனுமதிப்பதில்லை என்றும் குவாய்த் மன்னர் இவ்வொப்பந்தத்தின்படி இணங்கினார்.

62 ஆண்டுகளுக்குப்பின்னர் 19-6-61இல் இவ்வொப்பந்தத்தை இருதரப்பினரும் ரத்துச் செய்தனர். இதனால் குவாய்த் பூரண சுதந்திர நாடாகியது. 26-6-61இல் ஈராக்கின் பிரதம மந்திரியாகிய மேஜர் ஜெனரல் அப்துல் கரீம் காசிம், பழைய துருக்கிய ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த பஸ்ரு மாகாணத்தின் ஒரு பகுதியாக குவாய்த் இருந்தபடியால் சட்டப்படி ஈராக்கிற்குரிய பிரதேசம் என்றும், இந்த உண்மையை பிரிட்டனே 1899க்கு முன் ஒப்புக்கொண்டிருக்கிறதென்றும், ஈராக்கிற்கும் குவாய்த்துக்கும் இடையே எல்லை ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும், ஈராக்கின் ஒரு பகுதியாக இருக்கும் குவாய்த் விரும்பியபடி அரபு லீக்கில் சேரமுடியாதென்றும் விவாதித்து ஒரு நெருக்கடியான நிலைமையை மத்திய கிழக்கில் உருவாக்கியிருக்கின்றார். 1899ஆம் வருட ஒப்பந்தத்தை பொறுப்பேற்றவர்கள் 15,000 ரூபாவை கைலஞ்சமாகப் பெற்றுக்கொண்டு கைச்சாத்திட்டனர் என்றும் ஈராக் பிரதமர் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

சாவூதி அரேபியா, ஐக்கிய அரபுக குடியரசு, இந்தியா உட்பட பல நாடுகள் 'சுதந்திர குவாய்த்'தை அங்கீகரித்துள்ளன. பல சர்வதேச ஸ்தாபனங்களில் குவாய்த் அங்கத்துவம் வகித்துவருகின்றது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கத்துவம்கோரி விண்ணப்பம் அனுப்பியிருக்கிறது. இவ்விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னதாக ஈராக் குவாய்த்தைக் கைப்பற்ற முயற்சிக்கலாம் என்ற பீதி ஏற்பட்டிருக்கிறது.

### எல்லை மூடப்பட்டது

குவாய்த்தில் நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டு ஈராக்குடன் உள்ள எல்லை மூடப்பட்டிருக்கிறது. பாரசீக வளைகுடா வழியாக ஈராக்கிற்கு உணவுப்பொருள்களை ஏற்றிச்சென்ற ஈரானிய கப்பல்கள்மீது ஈராக்கைச் சேர்ந்த ரோந்துப் படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளன. இதை ஈராக் மறுத்துள்ளது. பிரிட்டன் குவாய்த்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பாரசீக வளைகுடாவிற்குப் போர்க்கப்பல்களை அனுப்பி வருகின்றது. கிழக்கு மத்தியதரைக்கடலிலிருந்த பிரிட்டிஷ் கடற்படையும் குவாய்த்துக்குப் புறப்பட்டிருக்கின்றது. கினியாவிலிருந்தும் பிரிட்டிஷ் படை அனுப்பப்படும் என்று தெரியவருகின்றது. கடந்த சனிக்கிழமை பிரிட்டிஷ் படைகள் குவாய்த்தில் புகுந்துவிட்டதாகவும் சாவூதி அரேபியாவும் இராணுவ உதவிபுரிய இணங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடு பாதுகாப்புச் சபையை ஓர் அவசரகூட்டம் நடத்துமாறு குவாய்த் கேட்டிருக்கிறது. இதற்கிணங்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை பாதுகாப்புச்சபை அவசரக்கூட்டம் ஒன்றினை நடத்தி நிலைமையைப் பரிசீலனை செய்தது. எனவே உலக அபிப்பிராயம் குவாய்த்துக்கு ஆதரவாகத் திரும்பிக்கொண்டிருக்கும்போது ஈராக் குவாய்த்தை கைப்பற்றுவதற்கு முயற்சிக்குமா? அடுத்த சில நாட்களில் இக்கேள்விக்குப் பதில் தெரிந்துவிடும.

### குடிசைக் கைத்தொழில் விருத்தியில் மந்திரி ஆர்வம்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க காரியாலயங்களுடன் இணைந்திருக்கும் தனது பிரதம அலுவலகத்தைக் கொழும்புக் கோட்டையில் இடவசதியுள்ள இடத்திற்கு மாற்றுவதுபற்றிக் குடிசைக் கைத்தொழில் இலாகா ஆலோசனை செய்கிறது. குடிசைக் கைத்தொழில் இலாகா எதிர்பார்க்கும் அபிவிருத்திக்கு இடமாற்றம் உசிதமாகப்படுகிறது.

சிறு கைத்தொழில் மூலம் செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்யவும், கைத்தொழிலை விருத்தி செய்யவும் இவ்வேற்பாடு பெரிதும் உதவுகிறதென்று வீடமைப்பு, தொழில், கலாசாரப்பகுதி மந்திரி அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளமகஜர் ஒன்றில்குறிப்பிட்டுள்ளார். கிராம மக்கள் வீடுகளிற் செய்யும் பொருள்களைக் குறிப்பிட்ட விலைகளில் வாங்கவும் அவற்றை விற்கவும் தகுதி வாய்ந்த ஸ்தாபனம் ஒன்று நிறுவவேண்டுமென மேலும் அவர் குறிப்பிட்டார்.

### பின்தங்கிய வகுப்பாருக்கு 114 கோடி

புதுடில்லி, ஜூலை 5

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பின்தங்கிய வகுப்பாரின் அபிவிருத்திக்கு 114 கோடி ரூபாய் செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

### ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே ஒரு பிரபல வியாபாரியுடன் பேசிக்கொண்டிருந்தேன். இப்போது இங்கு நல்ல புளி கிடைப்பதில்லையாம். புளியிலே பேரீச்சம்பழமும் உப்பும் கலந்து இருப்பதாயும், யாழ்ப்பாணம், அல்லது மட்டக்களப்பிலிருந்து நல்லபுளியை சமையலுக்கு வரவழைக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் சொன்னார்.

சென்ற யுத்தகாலத்தில் மிளகாய்த்தூளில் செங்கற்பொடியைக் கலந்தனர். களிமண் உருண்டைகள், மண், மணல், மண்ணாங்கட்டி எல்லாம் பல தானியங்களிலும் கலப்படமாகச் சேர்க்கப்பட்டன. அதை நினைக்கையில், பேரீச்சம்பழம், உப்பு கலப்படம் மேலாகுமல்லவா?

* * *

சில இறக்குமதி சாமான்களுக்கு அரசாங்கம் சமீபத்தில் தடை போட்டதல்லவா? அது சில பெரிய வியாபாரிகளுக்கு நல்லதாகிவிட்டதென்றார் அந்த வர்த்தக நண்பர்.

பல காலமாக வியாபாரமாகாமல், டின் காய்கறி சரக்குகள் குவிந்து கிடந்தனவாம். இறக்குமதித்தடை உத்தரவு வெளியான ஒரு சில நாட்களில் அச்சரக்கெல்லாம் கரைந்து பணமாகிவிட்டதாகவும், அரசாங்க உத்தரவுகள், பணக்காரருக்கே அதிக நன்மையாக இருப்பதாயும் இப்போது, அதிக சரக்குகளை வரவழைக்காமல், அவ்வப்போது வேண்டியதை மட்டுமே வரவழைத்து, விற்பதாகவும் தெரிவித்தார்.

* * *

இங்கு ஒரு கோவிலில் கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. அதில் பேசிய அன்பர், இந்து சமயத்தை உயர்த்தியும், மற்ற சமயங்களைச்சற்றேதாழ்த்தியும் பேசினார். தலைமை வகித்தவர் முடிவுரையில், இவ்விதம் பிற மதங்களைத் தாழ்த்திப் பேசுவது கூடாதென்றும், எல்லா மதங்களிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் கலந்திருப்பதாயும், நமக்குள்ளாகவே நல்லதும் கெட்டதும் சேர்ந்திருப்பதாயும் சொன்னார்.

கூட்டம் முடிந்தது. வெளியே வருகையில், ஓர் அன்பர் அத்தலைவரைப் பார்த்து, "நான் ஓர் இஸ்லாமியன். இக்கூட்டுப் பிரார்த்தனைக்குத் தவறுதுவந்துகடைசியில்உட்கார்ந்து கேட்பேன். நீங்கள் கடைசியாகக் கூறியதைப் பெரிதும்பாராட்டுகிறேன். ஒருவர் தம் மதத்தை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திப் பேசலாம். ஆனால் மற்ற மதங்களைப்பற்றிக் குறைவாகப் பேசப்படாது. நாஸ்திகம் பரவிவரும் இக்காலத்தில் ஆஸ்திக மதங்களுக்குள் புதிய ஒத்துழைப்பும் கூட்டுறவும் அவசியம் வேண்டும் என்றார். சரி தானே? மகாத்மா காந்தியும் இதற்காகத்தானே பல மத கூட்டுப்பிரார்த்தனை இயக்கத்தை ஆரம்பித்து நடத்தினார்.

* * *

சென்ற 6 மாதங்களிலே இலங்கையில் 286 கொலைகள் நடந்துள்ளனவாம்! கொலை விஷயத்தில் இந்த "தர்மதுவீபம்" உலகிலேயே முன்னதாக நிற்கிறது!

இது வெட்கப்படவேண்டிய விஷயம். கொலைக்கான காரணங்களை அலசி ஆராய்ந்து அக்காரணங்களை நீக்கக் கூடுமான முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஆனால் இதுபற்றி மதத்தலைவர்களோ, அரசாங்கமோ எவ்விதநடவடிக்கையும் எடுப்பதாகக் காணோம். அதிகரிக்கும் ஜனத்தொகை இப்படி ஒரு வகையில் குறையலாமென்ற எண்ணமா? இதே நிலை நீடித்தால் யாரும் நிம்மதியாக வாழமுடியாது போகும்.

# குழந்தைகளின் பங்கீட்டரிசியை குறைத்தால்

## ரூ. 40 லட்சம் மிச்சமாம்

கொழும்பு, செவ்வாய்

உணவு ஆராய்ச்சி நிலையம் 4 வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் பங்கீட்டரிசி குறைக்கப்படலாமென்று ஆலோசனை தெரிவித்ததன் பேரிலேயே அரசாங்கம் உத்தரவாத விலைத் திட்டத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு வயதுக்கு மேற்பட்டும் 3 வயதுக்குட்பட்டும் உள்ள குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 2 அவுன்ஸ் அரிசி வழங்கப்படலாம் என்றும் 3 வயதுக்கும் 4 வயதுக்குமிடையிலுள்ள குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 3 - 4 அவுன்ஸ் அரிசி வழங்கப்படலாம் என்றும் உணவு ஆராய்ச்சி நிலையம், உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரிக்கு ஆலோசனை கூறியுள்ளது.

இந்த ஆலோசனை செயற்படுத்தப்பட்டால் 40 லட்சம் ரூபாய் மிச்சப்படுத்தலாம் என உணவு அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

### ரயிலில் திருட்டு தாலிக்கொடியைக் காணவில்லை

யாழ்ப்பாணம், புதன்

சென்ற சனிக்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் ரயிலில் வந்து கொண்டிருந்த பெண் ஒருவர் தமது சூட்கேசை பறிகொடுத்தார். தவறிய சூட்கேஸ் கைக்கெட்டியது ஆனல் உள் இருந்த தாலிக்கொடிமறைந்துவிட்டது.

கொழும்பு புறக்கோட்டையிலிருந்து யாழ்தேவி மூலம் வந்து கொண்டிருந்தஅப்பெண் ஆனையிறவில் தமது சூட்கேசைக் காணுது ரயில்வே கார்ட்டுக்கு புகார் செய்தார். சூட்கேஸினுள் ரூ. 1200 பெறுமதியான தாலிக்கொடியும் 80 ரூபாவும் இருந்ததாகத் தெரிகிறது.

இது விஷயம்பற்றி யாழ்ப்பாணம் ஸ்டேசன் மாஸ்டரிடமும் பொலிஸ்டேஷனிலும் புகார் செய்யப்பட்டது.

### அரசாங்கம் பொருளாதார நெருக்கடியிலுள்ளது

—பாராளுமன்றக்காரியதரிசி

பதுளை, செவ்வாய்

பொருளாதார ரீதியில் அரசாங்கம் பெரிய நெருக்கடியை எதிர்நோக்கி நிற்கின்றது. இவ்விஷயத்தை மறைத்து வைக்கவோ அல்லது இது குறித்து வெட்கப்படவோ அரசாங்கம் எண்ணவில்லை.

இவ்வாறு பதுளை அரசாங்க முஸ்லிம் டாடசாலையில் நடைபெற்ற ஊவா தபால், தந்தி ஊழியரின் கூட்டுறவு சிக்கனச் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் வர்த்தக போக்குவரத்து மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. டி. எஸ். குணசேகரா தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாண ஸ்டேஷனில் விசாரித்தபோது சூட்கேஸ் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனல் திறந்துபார்த்த போது தாலிக்கொடியைக் காணவில்லையாம்

பொலிஸார் இது பற்றிப் புலன் விசாரணை நடத்துகின்றனர்.

## பார்லிமெண்ட் வருகிற 13-ந் தேதி கூடும்

கொழும்பு, செவ்வாய்

இன்றுநள்ளிரவுபார்லிமென்ட் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் 13ம் தேதி கூட்டம் ஆரம்பமாகும். சபையை ஒத்திவைக்கும் கவர்னர் ஜெனரலின் செய்தியை சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல வாசித்தார். பின் விகிதர் மேசைக்கருகில் நின்று, அங்கத்தினர்கள் கடந்த கூட்டங்களில் தந்த ஒத்துழைப்புக்கு அவர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

செனட்டிலும் இதே நிகழ்ச்சி நடைபெற்றது. செனட்சபைத் தலைவர் சர் சிரில் டி சொய்ஸா சபையை ஒத்திக்கும்வ செய்தியை சபையில் வாசித்தார்.

### ரூ. 2 லட்சம் கடன் கோரிக்கை

முள்ளியவளை, திங்கள்

'கிராம மின்சாரத் திட்ட வேலைகளுக்காக, அரசினரிடமிருந்து ரூ 2 லட்சம் கடனைப் பெறவேண்டும்' என்ற தீர்மானம், முள்ளியவளைக் கிராமச் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. தலைவர் திரு. வெ. அண்ணமலை தலைமை வகித்தார்.

### பெற்ருர் ஆசிரியர் சங்கம்

முள்ளியவளை, செவ்வாய்

தண்ணீரூற்று சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கக் கூட்டம், தலைமையாசிரியர் திரு. எஸ். எஸ். பொன்னம்பலம் தலைமையில் கூடியபோது பின்வருவோர், உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் தலைமையாசிரியர் திரு. எஸ். எஸ். பொன்னம்பலம், செயலாளர் திரு. ச. மயில்வாகனம்; துணைச் செயலாளர் திரு. வை. துரையப்பா, பொருளாளர் திரு. வை.சுப்பிரமணியம். செயற்குழு உறுப்பினர் திருவாளர்கள் து. நவரத்தினம், த. சோமசுந்தரம், க. பென்னையா.

### காஷ்மீர பற்றி ஹிந்து மகாசபை தீர்மானம்

புதுடில்லி, ஜுலை 4

ஐ. நா. விலிருந்து காஷ்மீர் பிரச்சினையை விலக்கிக் கொள்ளவேண்டுமென இங்கு கூடியுள்ள அகில இந்திய ஹிந்து மகாசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

### கிழக்கு நைஜீரிய பிரதமர்

புதுடில்லி, ஜுலை 4

இந்தியாவிலே சுற்றுப்பிரயாணம் செய்யும் கிழக்கு நைஜீரியப் பிரதமர் திரு. ஒக்பரா இன்று மீரட் ஜில்லாவில் ஜம்மு நதிப்பெருக்கத்தால் வீடிழந்தவருக்கு இரண்டறை வீடுகள் 250 கட்டுவதற்கான வீடமைப்புத்திட்டம் ஒன்றையும் பார்வையிட்டார். இந்தியாவிற் தான் பார்த்த பெரும்பான்மையான முன்னேற்றத் திட்டங்களைப்போல் கிழக்கு நைஜீரியாவிலும் விரைவில் ஏற்படுத்துவதாக மேலும் பிரதமர் ஒக்பரா குறிப்பிட்டார். திட்டங்களைப் பார்வையிடப் புறப்படுவதற்கு முன்னர் ராஜ் கட்டத்துக்குச் சென்று மகாத்மாகாந்தியின் சமாதிக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

### நேருவின் வாரிசு யார்?

புதுடில்லி, ஜுலை 4

தமது வாரிசைத் தாமே தேர்ந்தெடுப்பது என்பது இந்திய நாட்டுக்கே தாம் செய்யும் அவமரியாதையாகும் என்று பிரதம மந்திரி நேரு இங்கு தெரிவித்தார்.

"உங்களது அரசியல் வாரிசைத் தெரிவிப்பதில், காந்திஜியின் உதாரணத்தை தாங்கள் பின்பற்றக்கூடாதா?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

காந்திஜியிடத்தில் எனக்கு பெருத்த மதிப்பு உண்டு. ஒரு அரசர் போன்ற தோரணையில் அவர் நடந்து கொண்டார். ஆனல் நானே வெறும் ஜனநாயகவாதிதானே!" என்று நேரு பதிலளித்தார்.

## பஸ் ஊழியர்கள் மீது ஏராளமான புகார்கள்

### பொதுமக்களுக்கு இ. போ. ச. அதிபர் வேண்டுகோள்

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகளுக்கும் உதவியாளர்களுக்கும் எதிராக ஏராளமான புகார்கள் பொதுமக்களிடமிருந்து கிடைத்து வருவதால் போக்கு வரத்துச் சபை அதிபர் அவர்களை எச்சரித்துள்ளார். அவர்கள் மீண்டும் இந்தக் கட்டளைகளை மீறினல் இ. போ. ச. அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படி அதிபர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். இவ்வித புகார் கூறுபவர்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்த மற்ருேர் பிரயாணியின் பெயர் விலாசத்தையும், தங்கள் பிரயாணச் சீட்டையும் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும். இந்தக் காரணத்திற்காகப் பிரயாணம் செய்பவர்கள் பஸ்ஸில் இலவசமாகச் செல்ல பிரயாணச் சீட்டு வழங்கப்படுவார்கள். மேற்குப் பகுதி இ. போ. ச. ஊழியர்களைப் பற்றியே அதிகம் புகார் வருவதாய்க் கூறப்படுகிறது.

### தமிழ்நாட்டு நிதிமந்திரி சுப்ரமண்யம்

சென்னை, ஜுலை 5

தற்போது வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் தமிழ் நாட்டு நிதி அமைச்சர் திரு. ஸி. சுப்ரமண்யம் ஆகஸ்ட் மாதம் 10-ந் திகதி தாயகம் திரும்புவார். ஆகஸ்ட் 5-ந் திகதி திரும்புவதாக அவர் முன்பு திட்டமிட்டிருந்தார்.

### ஊழியர்கள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவார்கள் என நாம் நம்புகிருேம்.

இலங்கையைவிட்டுப் பலர் ஏன் வெளிநாடுகளுக்குச் செல்கிருர்கள் என்பதற்கான காரணங்களை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். பணத்துக்காக இவர்கள் செல்கின்ருர்களா? எல்லாவற்றையும் பணம் தந்துவிடாது. எந்த சூழ்நிலையில் வேலை செய்கிருேம் என்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டும்.

தற்பொழுது எழுந்துள்ள மொழி, சமய, இனப்பாகுபாடுகள் மறைந்து எல்லோரும் நன்மைபெற முடியுமாயின் எங்களது அழகிய ஆனல் துரதிர்ஷ்டவசமான நாடு ஆனந்தமயமான நாடாக விளங்கும். இலங்கையில்மட்டுமல்ல வெளிநாடுகளில்கூட வேற்றுமைகளை ஒழிப்பதையே முக்கியமாகக் கருதவேண்டும். நாம் ஒற்றுமையாக வாழாவிட்டால், பிரச்சினைகளைச் சமாளிக்க முன்வராவிட்டால் தமிழராக இருந்தாலும் சிங்களவராக இருந்தாலும் பறங்கியராக இருந்தாலும் எல்லோருமே தேர்ல்வியுற்று மடியவேண்டியதுதான்."

### மாநகரசபை விசேஷ கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் விசேஷ கூட்டமொன்று வருகிற 7ம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர மண்டபத்திலுள்ள சபை மன்றத்தில் நடைபெறும்.

### பாடசாலை விஸ்தரிப்பு

முள்ளியவளை, திங்கள்

வித்தியானந்தக் கல்லூரியின் இடநெருக்கடியைத் தீர்க்குமுகமாக, ரூ. 9 ஆயிரம் செலவில் புதிய வகுப்பறைகளைக் கட்டுவதற்குக் கல்விப் பகுதியினர் தீர்மானித்துள்ளனர். குறித்த கட்டிடத்தைப் பொறுப்பேற்றுச் செய்யும்படி, பெற்ருர் ஆசிரியர் சங்கத்தைக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

## நடந்து செல்லும் தூரத்தில் வாக்களிப்பு நிலையங்கள்

### அடுத்த தேர்தல்களில் நிறுவப்படும்

கொழும்பு, செவ்வாய்

இனி வரும் பொதுத் தேர்தல்களில் வாக்காளர்கள் நடந்து செல்லும் தூரத்திலேயே வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். தேர்தல் கமிஷனர் திரு. டயஸ் அபேசிங்காவின் இம்முடிவு நேற்றிரவு வெளியான விசேஷ கஜெட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. வாக்காளர்களின் வசதியை முன்னிட்டே தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதாய் அவர் கூறினர்.



டெலிவிஷன் காட்சிகளைப் பதிவுசெய்வதற்காக பிரிட்டனில் உபயோகிக்கப்படும் கருவி.

### பெங்களூரில் டேப்ரிகார்டர் உற்பத்தி

பெங்களூர், ஜுலை 4

பெங்ளூரிலுள்ள பாரத் எலெக்ட்ரானிக்ஸ் ஸ்தாபனத்தில் ஜப்பானிலுள்ள நிப்பான் எலெக்ட்ரிக் கம்பனியின் ஒத்துழைப்புடன் உயர் ரக டேப் ரிக்கார்டர் சாதனங்களைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தமொன்று கையெழுத்தாகி இருக்கிறது. பாரத் எலெக்ட்ரானிக்ஸ் ஸ்தாபனத்தின் சார்பாக அதன் மானேஜிங் டைரக்டர் பி. வி. பாலிகாவும், நிப்பான் எலெக்ட்ரிக் கம்பெனியின் சார்பாக சாஜியும் ஒப்பந்தததில் கையெழுத்திட்டனர். நிப்பான் எலெக்ட்ரிக் கம்பெனியுடன் கையெழுத்தாகியிருக்கும் ஒப்பந்தங்களில் இது இரண்டாவது ஆகும். முதலாவது ஒப்பந்தம் ஒலிபரப்பு டிரான்ஸமீட்டர்கள் தயாரிப்பு சம்பந்தப்பட்டதாகும்.

இந்த ஒப்பந்தத்தின்படி ஜப்பானியக் கம்பெனி மூன்று ரக டேப்ரிக்கார்டர் சாதனங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய தொழில் நுட்ப யோசனைகளையும், பயிற்சி வசதிகளையும் அளித்து உதவும்.

இந்தியாவில் எலெக்ட்ரானிக் கருவிகளைத் தயாரிக்கும் முயற்சியில் இந்த ஒப்பந்தம் இன்னும் ஒரு முக்கியமான கட்டத்தை குறிக்கிறது. 1955ல் இரண்டு இனங்களை மட்டிலுமே தயாரித்து வந்த பாரத் எலெக்ட்ரானிக்ஸ் ஸ்தாபனம் இப்போது டிரான்ஸ் மீட்டர்கள், ரிசீவர்கள் முதலியவை உட்பட 22 இனங்களைத் தயாரித்து வருகிறது. அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் ரயில்வேக்கள், ரேடியோ நிலையங்கள், சிவில் விமானப் போக்குவரத்து ஸ்தாபனங்கள், பாதுகாப்புப்பிரிவு ஆகியவற்றுக்கு வேண்டிய பல கருவிகளும் தயாரிக்கப்படும்.

# கூட்டுறவு இயக்கம் விருத்தியுற சத்தியநெறி பெருகவேண்டும்

## டாக்டர் விக்ரமசிங்கா அறிவுரை

மாத்தறை, செவ்வாய்

"கூட்டுறவு அதிகாரிகளிடையேயும் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றிடையேயும் காணப்படும் ஊழல்கள் உலக கூட்டுறவு இயக்கத்துக்கே இழிவையும் அவமானத்தையும் தருகின்றன." இவ்வாறு அக்குரஸா எம். பி. யும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா கூட்டுறவாளர் விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார்.

இவ்விழா சென். தோமஸ் கல்லூரியில் நடைபெற்றது. திரு. விக்ரமசிங்கா தொடர்ந்து பேசியதாவது: கூட்டுறவுச் சங்கங்களையும் ஏனைய சிப்பந்திகளின் வேலைகளையும் மேலதிகாரிகள் கூர்ந்து கவனித்தல் அவசியம். இவ்வாறு செய்வதால் ஊழல்களைச் சிறிது குறைத்துக் கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

"சுயநல எண்ணத்தோடு இவ்வியக்கத்தில் சில முதலாளிகள் புகுந்தமையே ஊழல்களுக்கு முக்கிய காரணம். உலகத்திலே இருவித கூட்டுறவு இயக்கங்கள் உள்ளன. ஒன்றை முதலாளிகளின் கூட்டுறவு இயக்கம் எனலாம். இது நாட்டிலுள்ள சில பணக்கார உயர்குடி மக்கள் ஒன்று கூடி ஏழை மக்களைக் கொள்ளையடித்து உறிஞ்சிவிடும் முறை. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் யு. என். பி. அரசாங்கத்தின்கீழ் இலங்கையிலும் இது காணப்பட்டது.

மற்றையது, சோஷலிஸக் கூட்டுறவுமுறை. இம்முறையில் பொதுமக்களது ஊக்கமும் உழைப்பும் இணைக்கப்பெற்று தேசிய வருமானத்துக்கு வழி காண்பது.

ரஷ்யாவிலும் சீனாவிலும் இன்றைய நமது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலும் இம்முறை காணப்படுகின்றது.

கூட்டுறவு இயக்கம் திருப்திகரமாக இயங்குவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் அத்தியாவசியமானது சத்திய நெறியாகும்"

திரு. இரத்ன தேசப்பிரிய சேனநாயக்கா பேசுகையில், மொத்த விற்பனை ஸ்தாபனத் தலைவராகத் தாம் நியமிக்கப்பட்டபோது தகுதியற்றவர்கள் யாவரையும் வேலைநீக்கம் செய்வது; இல்லாவிட்டால் தாமே வேலையிலிருந்து நீங்கி விடுவதென உறுதி கொண்டாராம். திரு. சேனநாயக்கா மேலும் கூறியதாவது:-

கூட்டுறவு ஸ்தாபனத்தில் 'இரண்டு கால் எலி'கள் இருந்தன. அவற்றுட் சிலவற்றை ஸ்தாபனத்தினின்றும் அகற்றி விட்டேன். அகற்றப்பட வேண்டியவர்கள் இன்னும் சிலர் இருக்கிறார்கள்.

### ஆலடிப்பிள்ளையார் கோயில் நிர்வாகிகள்

பருத்தித்துறை, செவ்வாய்

ஆலடிப் பிள்ளையார் கோவில் மகாசபைக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோது திருவாளர்கள்: சி. மயில்வாகனம், வ. சபாபதிப்பிள்ளை, த. பொன்னையா ஆகியோர் முறையே புதுவருடத்திற்குத் தலைவர், காரியதரிசி, தனாதிகாரியாகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கோயில் மனேஜராக திரு. சி. முத்துக்குமாரசாமி தெரிவு செய்யப்பட்டார்.

---

சில கூட்டுறவு மொத்த விற்பனவுச் சங்கங்கள் தமக்கு வேண்டிய தேவைகளுக்குஅதிகமாக பொருள்களைக் கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து பெற்றுக் கள்ள விலைக்கு விற்கின்றனர்.

கூட்டுறவு ஸ்தாபனம் இத்தகையவர்களை அகற்றிவிட்டு ஸ்தாபனத்தின் மகத்துவத்தை நிலைநாட்டிமக்கள்லாபமடையச் செய்வதா அல்லது நிட்டாயமாக இருந்து கொள்வதா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வி.

# 'ஆஸ்பத்திரி வீதியில் ஒரு வீடமைப்புத் திட்டம்'

## மாநகரசபைக்குவரும் பிரேரணை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையின் அடுத்த மாதாந்தக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகளை உதவிமேயர் திரு. என். ரி. செல்லத்துரை கொண்டுவர விருப்பதாக முன்னறிவித்தல் செய்துள்ளார்.

"யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வித உதவியையும் இவ்வரசாங்கம் இதுவரை செய்ததாகத்தெரியவில்லை. இம்மாநகர சபைக்குச் சொந்தமான 'கற்குளம்' என்று அழைக்கப்படும் நிலமொன்று ஆஸ்பத்திரி வீதியில் உள்ளது. அங்கு சுகாதாரத்துக்குக் கேடான நிலையில் மிகவும்வறிய சனங்கள் வசிக்கின்றார்கள். எனவே, இவர்களது நல்வாழ்வுக்கு உதவி செய்யும் முகமாக அங்கு ஒரு வீடமைப்புத் திட்டததை உருவாக்க வேண்டுமென்றும் இதற்குத் தேவையான நிதியை மத்திய அரசாங்கத்திடமிருந்து கோருவதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது".

"மூன்று மாதகாலத் தவணையில் வரிப்பணம் அறவிடுவது மக்களுக்குக் கஷ்டத்தை விளைவிக்கிறது. ஆகையால் முன்பிருந்ததுபோல இதனை நாலரை மாதகாலமாக நீடிக்கவேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது."

### வெளியூர் பஸ்கள் வேகமாகச் செல்ல ஏற்பாடு

கொழும்பு, திங்கள்

இலங்கைப் போக்கு வரத்து சபை வெளியூர் பஸ் சேவைகளின் வேகத்தைத் துரிதப்படுத்துமெனத் தெரிய வருகின்றது.

கொழும்பு—கண்டிப் பாதையில் பத்து 'எக்ஸ் பிரஸ்' பஸகள் 30 நிமிஷங்களுக்கு ஒரு முறை செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

கொழும்பு-குருநாகல் வீதியிலும் அதே வேகத்தில் ஐந்து 'எக்ஸ் பிரஸ்' பஸ்கள் சேவைக்கு விடப்படும்.

இ. போ. ச.வின் முக்கிய தொழில் நிர்வாகி திரு. இ. எஸ். விக்கிரமசிங்கா சேவையை அதிகரிப்பதற்காக கொழும்பு-கண்டிப் பாதையில் பிரயாணிகளுக்கென பஸ் நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்த இடங்களில்தாளிபஸ்சாரதிகள் பஸ்களை நிறுத்துவார்கள். பஸ் ஓட்டத்தைத் துரிதப்படுத்துவதற்காகவே இந்த முறை அனுசரிக்கப்படும். எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஆறு இடங்களில் மட்டும் தான் நிறுத்தப்படும்.


மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM · REG. TRADE MARK 1950

மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

மூவர்ண கலர் லேபிளுடன் மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM · REGD. TRADE MARK No 18255 · A. M. BUHARI · 255, 5th CROSS ST. COLOMBO

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு.



அழகிய பெனியன்! காலமேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

Leyden L.I.L.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பெருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது "லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.


# 'கேட்பதெல்லாம் கொடுப்பது கல்வி இலாகாவுக்குசாத்தியமில்லை'

## பாடசாலை அதிபர்களுக்கு கல்வி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

"பாடசாலை அதிபர்கள் கோரும் சகல வசதிகளையும் அளிப்பதென்பது கல்வி இலாகாவுக்குசாத்தியமில்லை. உள்ள வசதிகளைச் சரியாக பயன்படுத்துவதிலிருந்துதான் பாடசாலை அதிபர்களின் திறமையைக் கணிக்கமுடியும்" என்று கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் கூறினர்.

உதவிக் கல்வி டைரக்டர் திரு. ராஜபத்திராவினல் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு மகாநாடு நேற்று தேர்ஸ்டன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயஅதிபர்கள் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் கல்வி மந்திரி தொடர்ந்து பேசுகையில் ஒவ்வொரு பிள்ளைகளும் இந்த நாட்டின் உண்மையான பிரஜையாக பூரண வாழ்வு வாழ்வதற்கு வழி வகுப்பதுதான் தேசிய கல்வித் திட்டத்தின் நோக்கமென்றார். இதை நோக்கத்திற் கொண்டு பலவேறு துறையிலும் நிதானமான பாட போதனையளிப்பதற்கு ஒவ்வொரு பாடசாலையும் திடடம் வகுக்கவேண்டுமென்று கல்வி மந்திரி கூறினர். ஒவ்வொரு பிள்ளையும் எந்தத் துறையில் ஆர்வம் உள்ளதாக இருக்கிறதென்பதை அறிந்து அந்தத்துறையில் அதை முன்னேற்றம் பெறுவதற்கு பாடசாலை அதிபர் கவனம் செலுத்த வேண்டுமென்று மந்திரி கூறினர்.

### திருவிழாக்கள் முடிவுற்றன

முள்ளியவளை, செவ்வாய்

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரன் கோவில் திருவிழா, செம்மலை மாணிக்கப் பிள்ளையார் கோவில் திருவிழா, குமிழமுனை கற்பக பிள்ளையார் மணவாளக்கோலவிழா ஆகியவை இனிதே முடிவுற்றன.

### ஐ. நா. உயர் ரீதியில் மாற்றம்

#### ஹமர் ஷில்ட் யோசனை

நியூயோர்க், ஜூலை 4

ஐ. நா. உயர் பீடத்தில் மாற்றம் செய்ய வேண்டுமென்று ஐ.நா. பொதுக்காரியதரிசி திரு. டாக்டர் ஹமர் ஷில்ட் யோசனை தெரிவித்துள்ளார்.

பொதுக் காரியதரிசி ஒருவருக்குப் பதிலாக மேற்கு, கிழக்கு வல்லரசு நாடுகளையும் நடு நிலைமை நாடுகளையும் சேர்ந்த மூவர் கொண்ட சபை கடமையாற்ற வேண்டுமென்று சோவியத் பிரதமர் குருஷேவ் கூறிய யோசனையை திரு. ஹமர் ஷில்ட் நிராகரித்தார்.

ஐ. நா. உயர் ரீதியில் மாற்றம் செய்யவேண்டுமென யோசனை கூறிய திரு. ஹமர்ஷில்ட், பொதுக் காரியதரிசியும் 14 உதவிக் காரியதரிசிகளும் இருக்கவேண்டுமென்று கூறினர்.

திரு. ஹமர்ஷில்டின் இந்த யோசனையை ஐ. நா. பொதுச் சபை விரைவில் விவாதிக்கும்.

### விக்னேஸ்வரா விளையாட்டுப் போட்டி

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி விளையாட்டுப்போட்டி இம்மாதம் 7-ம் திகதி நடைபெறும். உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இவ்வைபவத்தில் திருமதி சிவசிதம்பரம் வெற்றி வீரருக்குப் பரிசில்கள் வழங்குவார்.

# ஆபாசப் புத்தகங்களை தடைசெய்க

### பட்டினசங்கம் தீர்மானம்

பொல்காவலை, செவ்வாய்

"ஆபாசப் புத்தகங்களைக் குழந்தைகளுக்கு விற்றதாகக் குற்றம்சாட்டப்பட்டு, ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவருக்கு 15 வருடகால சிறைத்தண்டனையும் 20 கசையடிகளும் கொடுக்கப்படவேண்டும்" என்று பொல்காவலை பட்டின சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் திரு. காமினி டி' சில்வா கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆபாசப் புத்தகங்கள் விற்பனை செய்வதைத் தடைசெய்ய வேண்டும் என்று மந்திரியைக் கேட்கும் தீர்மானமொன்றைக் கொண்டுவரும் பொழுதுதான் திரு. டி' சில்வா மேற்கண்டவாறு கூறினர். திரு. டி'சில்வா தொடர்ந்து பேசுகையில்,கடைகளில் மலிந்துகிடக்கும் இந்த ஆபாசப் புத்தகங்களை வாங்கி வாசிப்பது சிறுவர் சிறுமிகளிடையே ஒரு பழக்கமாக வந்துவிட்டது என்று கூறினர்.

ஆபாசப்புத்தகங்களைத்தடை செய்யவேண்டும் என்ற திரு. டி' சில்வாவின் கருத்தை ஆதரித்த தலைவர் திரு. எச். பி. சர்னலிஸ் அப்புத்தகங்களை விற்பனை செய்பவர்களுக்குக் கொடுக்கும் தண்டனையை ஆதரிக்க மறுத்துவிட்டார்.

ஆபாசப் புத்தகங்கள் விற்பனை செய்வதை தடைசெய்ய வேண்டும் என மந்திரியைக் கேட்கும் தென்று தீர்மானிக்கப்பட்டது.

# வவனியா கொலை முயற்சி வழக்கு

### நன்னடத்தைப்பிணையில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

1959-ம் வருடம் டிசம்பர் மாதம் 31 ந் திகதி முத்தையா திருநாவுக்கரசு என்பவரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டி ஈ. பி. கே. பி. வேலுக்குட்டி என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கில் வடமாகாண சுப்ரீம் கோர்ட் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா எதிரியை இரண்டு வருடங்களுக்கு ஆயிரம் ரூபாய் நன்னடத்தைப் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

# வானெலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 5-7-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம். 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 5-45 கிளாரினட்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 வி. கே. குமாரசாமி—வயலின், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 எங்கள்விருப்பம், 9-30 வி சச்சிதானந்தன்—பேச்சு, 9-45 லீலா துரைசிங்கம்—பாட்டு.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர்,7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வி. மீனும்பாள் ராமசுவாமி—வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12 30 ஆசிரியர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 2-10 அரிமனம் வி. ஸ்ரீனிவாசன்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல் 7-45 'இடிதாங்கி'—நாடகம், 8-00 வி. மீனும்பாள் ராமசுவாமி—வீணை, 8-30 திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-50 இசைமாலை.

# நேசவுத் தொழிலில் புதிய கண்டுபிடிப்பு

## யாழ்ப்பாணம் இளைஞர் சங்கத்தின் சாதனை

யாழ்ப்பாணம், புதன்

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பாவோடும் இயந்திரமொன்றை, யாழ்ப்பாணம் நுண்கலை நெசவு நிலையத்தில் உள்நாட்டு அமைச்சின் பிரதம உதவிக் காரியதரிசியான திரு எம். ஸ்ரீகாந்தா நேற்றுக் காலை இயக்கி ஆரம்பித்துவைத்தார்.

யாழ்ப்பாணம் இளைஞர் சமூகபொருளாதார நலசங்கக் காரியதரிசியான திரு. சாமுவேல் தம்பையா நெசவு இயந்திரத்துறையில் ஓர் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ள இந்த புதிய இயந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளார். இதன் மூலம் நெசவுத் தொழில் இவ்வளவு காலமும் இருந்துவந்த கஷ்டம் நீங்கிவிடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

மிக இலகுவான முறையில மைக்கப்பட்ட பாவோடும் இந்த இயந்திரத்தை இச்சங்கத்தார் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிருர்கள். நூலைச் சிக்க விழ்த்து, பண்படுத்தி தறியில் போட்டு ஆடை நெய்யக்கூடிய அளவுக்கு அத்தனை வேலையையும் இந்த இயந்திரம் சில மணி நேரத்தில் மிகச் சிறந்த முறையில் குறைந்த காலத்தில்செய்து முடிக்குமாம்.

இப்படியான வசதியான இயந்திரம் இலங்கையில் வேறெங்கும் இல்லையெனத் தெரிகிறது.

இதனை உற்பத்தி செய்ய சுமார் 1000 ரூபாய்மட்டுமே செலவிடப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த இயந்திரம் இப்பொழுது யாழ்ப்பாணம் நுண்கலை நெசவு நிலையத்தில் இயக்கப் பட்டுவருகிறது. இந்த இயந்திரத்தை இயக்கிவைத்து திரு. ஸ்ரீகாந்தா பேசுகையில் இப்படியான இயக்கங்கள் மேலோங்கி வளரவேண்டுமென்றும் நமது நாட்டின் வளர்ச்சிக்கு இவைகளே இன்று அத்தியாவசிய தேவையென்றும் இதில் இளைஞர்களும் பொது மக்களும் சேர்ந்து பொது மக்கள் நல இயக்கமாக இவைகள் உருவெடுக்க வேண்டுமென்றும் கூறினர்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்—2.

சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெகல.


# நால்வர் கைது

காத்தான்குடி, செவ்வாய்

சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென்ற சந்தேகத்தின் மீது புன்னைக்குடாவிலுள்ள ஒரு தென்னந்தோட்டத்தில் நான்குபேரை பொலிஸ்கோஷ்டியொன்று கைதுசெய்தது. இந்நால்வரில் ஒருவர் ஏறுவூரில் ஒரு பெண்ணை மணமுடித்துள்ளாராம்.

கைது செய்யப்பட்டவர்கள் தலைமன்னர் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

# நெல் உபமான்ய

## உத்தரவாத விலைத்திட்டம்

### மூன்று அமைச்சர்கள் ஆராய்ச்சி

கொழும்பு, செவ்வாய்

நெல் உற்பத்திக்கான உபமானிய திட்டமும் உத்தரவாத விலைத் திட்டமும் திரும்பவும் ஆராயப்படவிருக்கின்றன. வர்த்தக உணவு மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன, நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிவசாயகாணி தற்காலிக மந்திரி திரு. எம். தென்னக்கூன் ஆகிய மூவரும் உபமானிய முறையும் உத்தரவாத முறையும் இன்று எவ்வாறு செயற்பட்டு வருகின்றனதென்பதை ஆராய்ச்சி செய்கின்றனர்கள். இரு நோக்கங்களைக் கொண்டு இவர்கள் தமது ஆராய்ச்சியை நடத்துகிருர்கள். நெல் உற்பத்திக்கான உபமானியத் திட்டம் திருப்திகரமாகச் செயற்படுகின்றதா என்பது ஒன்று. மற்றையது, உத்தரவாத விலைத்திட்டம் விவசாயிகளுக்குப் போதிய நன்மை அளிக்கிறதா என்பது.

செயற்பட்டுவரும் முறைகளை ஆராய்ந்ததன் விளைவாக உத்தரவாத விலைத் திட்டத்தினுல் விவசாயிகள் போதிய நன்மை பெறவில்லையெனத் தெரிகின்றது. மத்திய வகுப்பினர் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலை கொடுத்து நெல்லை வாங்குவதே இதற்குக் காரணமாகும். உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கமக்காரர் நெல் விற்பனையாகும் காலங்களில் அவர்களிடமிருந்து உடனே பணங்கொடுத்து வாங்கிக் கொள்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களிற்குப் பணவசதியில்லை. தரகர்மார் இச் சந்தர்ப்பத்தை தமக்குச் சார்பாக பயன்படுத்திக் கொள்கின்றனர்.

# வகுப்பறையில் தலைமையாசிரியர் குடும்பம்

நுவரேலியா, செல்வாய்

நானுஓயா அரசாங்க சிங்கள தமிழ் கலவன் பாடசாலையின் தலைமையாசிரியர் வசிக்கும் இடத்தின் கட்டடங்கள் இடிந்து விழும் நிலைமையில் இருக்கின்றன. இது பற்றி கண்டியிலுள்ள கல்வியதிகாரிகளுக்கு முறையிட்டதில், 'கட்டடங்கள் ஆபத்தான நிலையில் இருந்தால் அதைவிட்டு உடன் வெளியேறவும்" என்று கல்வி அதிகாரிகள் தந்தி மூலம் தெரிவித்துள்ளார்கள்.

பாடசாலை தலைமையாசிரியரும் அவரது குடும்பமும் வசிப்பதற்காக நுவரேலியா எம். பி. திரு. டி. வில்லியம் பெர்ணுன்டோ எடுத்த முயற்சி தோல்வியடைந்தது. தற்சமயம் இத் தலைமையாசிரியர் குடும்பம் பாடசாலை வகுப்பொன்றுக்குள் வசித்து வருகின்றது.

# 'கட்டண உயர்வு இப்போது இல்லை"

கொழும்பு, செவ்வாய்

"பஸ் பிரயாணக் கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இப்பொழுது இல்லை" என்று பதில் போக்குவரத்து மந்திரி திரு. எம். பி. டி. ஸட். சிறிவர்த்தன கூறினர்.

இ. போ. சபையின் போக்குவரத்துச் சேவை சிறந்தமுறையில் திருத்தப்பட்ட பின்னரே உத்தேசக் கட்டண உயர்வு பற்றி ஆலோசிக்கப்படும் என்று தெரிவித்தார்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

பவுன் அடையாளம் உள்ள

அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுனை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.
J. D. 3


# வெள்ளைச் சீனி இனி கிடைக்கும்

கொழும்பு, செவ்வாய்

நாளை தொடக்கம் மீண்டும் வெள்ளைச் சீனி கிடைக்கும். 10,000 தொன் வெள்ளைச் சீனி நேற்று கப்பலிலிருந்து இறக்கப்பட்டது.

இன்னும் சில தினங்களில் மேலும் 30,000 தொன் வெள்ளைச் சீனி வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளைச் சீனி விற்பனையை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

# கமக்காரர்களிடம் புகையிலை கொள்முதல்

## தற்காலிகமாக நிறுத்த யாழ்ப்பாண மலையாள விற்பனவுச் சங்கம் முடிவு?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை விற்பனவுச் சங்கம் கமக்காரர்களிடமிருந்து புகையிலையைக் கொள்வனவு செய்வதைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதென்று தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதான மலையாளத்தவர்களுக்கேற்றமாதிரியாக உலர்த்தப்பட்ட புகையிலையை எடுப்பதில் கஷ்டமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மலையாளம் புகையிலைக் கோட்டா அண்மையில் புதுப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இச்சங்கம் கமக்காரர்களிடமிருந்து புகையிலையைக் கொள்வனவு செய்யத்தொடங்கியது. ஆனல் இந்தமுடிவு வெளிவர முன்பே புகையிலையை உலர்த்தியவர்கள் உள்ளூர்த்தேவைக் கேற்றவாறே இதனை உலர்த்தியிருப்பதாலும் மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாகப் பதனிடப்படாததாலும் கொள்வனவு செய்யமுடியாத நிலையில் சங்கம் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது.

இப்பொழுதெல்லாம் மலையாள உலர்த்துடன் புகையிலை சங்கத்துக்கு வருவதில்லையாகையால் இதனையே வாங்கி ஏற்றுமதி செய்யக்கூடியதாகச் சங்கமே பதனிட முடியுமா என்பதுபற்றி இச்சங்கம் இப்பொழுது ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. 770 கண்டிப் புகையிலையைமலையாள உலர்த்தாக எடுக்க முடியாது என்று தெரிகிறது.

இந்நிலையை ஆராய்ந்து ஓர் முடிவு செய்வதற்காக இச்சங்கத்தின் கமிட்டிக் கூட்டம் இன்று கூடுகிறது. இதில் பிரச்சினைகள் ஆராயப்பட்டு முடிவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## நீதிஸ்தலத்தின் அவல நிலை

### போதிய ஆசன வசதி இல்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டு நீதிஸ்தலம் இன்னமும் எதுவித அபிவிருத்தியும் இல்லாமல் முன்புபோலவே வசதியற்ற கட்டிடத்தில் போதிய ஆசனங்கள் இல்லாமல் பழைய பங்களாவாகவே காட்சியளிக்கிறது.

இந்த நீதிஸ்தலத்துக்கு வழக்கு விசாரணைகளின்பொருட்டு செல்லும் வழக்கறிஞர்களுக்குக்கூட இருப்பதற்குப் போதிய வசதி அங்கு செய்யப்படவில்லை. வழக்கறிஞர்கள் விருந்தையிலும் நடைபாதையிலும் நின்று கொண்டிருக்கிறார்கள். போதிய இடவசதியற்ற இக்கட்டிடத்தில் ஆசனங்கள் அதிகளவில் வைக்கமுடியாமலும் ஆசனங்கள் போதியளவு இல்லாமலும் இருக்கிறது. இதனல் வழக்கறிஞர்கள் ஒருவரையொருவர் நெருக்குண்டு அமர்ந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் மண்டபத்துள் வழக்காளிகள், எதிரிகள் ஆகியோர் தங்கியிருப்பதற்கு வசதியீனமாக இருக்கிறதாகத்தெரிகிறது. வழக்கு விசாரணைகளைப் பார்வையிடுவதற்கு வரும் மக்கள் இன்னேர் புறத்தில் நின்றுகொண்டு விசாரணைகளைக் கவனிக்கவேண்டியிருப்பதாகவும் தெரிகிறது.

## இளம் குற்றவாளிகளுக்கு விடுமுறை

கொழும்பு, செவ்வாய்

பாடசாலைகளில் பயின்றுவந்த இளம் குற்றவாளிகளுக்கு பாடசாலைத் தலைமை ஆசிரியர்களோ அல்லது மனேஜர்களோ விடுமுறை வழங்க கைத்தொழில் உள்நாட்டு கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அனுமதியளித்துள்ளார்.

இத்தகைய குற்றவாளிகளுக்குமேலும் விடுமுறைதேவைப்பட்டால் குழந்தைகள் பராமரிப்பு சேவைக் கமிஷனர் அந்த விசேஷவிடுமுறையைவழங்கலாமென்று மந்திரி அவருக்கு அதிகாரம் அளித்துள்ளார்.

---

## மின்சாரக் கோளாறு

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறைப் பட்டின சபை எல்லைக்குள் தொடர்ந்து மின்சார விநியோகத்தில் கோளாறு ஏற்பட்டுவருகிறது.

நேற்றைய தினம் இரவு முற்றுகப் பட்டினம் இருளில் ஆழ்ந்தது. பலமான புயற் காற்றுடன் இருளும் சேர்ந்ததால் பட்டினக் குடியிருப்பாளர்கள் பெரும் கஷ்டமடைந்தனர்.

## புத்தக வெளியீட்டு மன்றம் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் புத்தக வெளியீட்டு மன்றத்தின் கூட்டம் நல்லூரில் திரு. கே. பி. முத்தையா தலைமையில் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

ஈழத்து எழுத்தாளர்களின் தரமான படைப்புகள் பல இருந்தும் பண நெருக்கடி காரணமாக அவைகள் அச்சேருமல் மறைந்து கிடக்கின்றன. அத்தகைய நூல்களைத் தேடி எடுத்து அச்சிடுவதற்கு அதற்கான பொருளுதவி புரியுமாறு பொதுமக்களை இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

---

## சோஷலிஸ்ட் சாமான்களுக்கே முதலிடம்

கொழும்பு, செவ்வாய்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சோஷலிஸ்ட் நாடுகளின் சாமான்களுக்கே முதலிடம் கொடுக்க வேண்டுமென்றும், அந்நாடுகள் கொடுக்க முன்வரும் சாமான்கள் பற்றி முதலில் பரிசீலனை செய்யுமாறும் வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன டைரக்டர்கள் சபையில் கூறினர்.

# இலங்கைக்கு 2 லட்சம் தொன் பர்மா அரிசி

## இவ்வாண்டு இறக்குமதி செய்யப்படும்

கொழும்பு, செவ்வாய்

1961-ம் ஆண்டில் 200,000 தொன் அரிசி பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுமென லண்டனில் தற்போது பிரசுரிக்கப்பட்ட சாம்ராஜ்ய பொருளாதாரக் கமிட்டி சஞ்சிகை கூறுகிறது.

1960 - 61-ம் ஆண்டில் பாகிஸ்தான் அரிசி உற்பத்தி உலகில் பெரியதாக இருந்ததென சஞ்சிகை கூறுகின்றது. பர்மா, தென்வியட்னும் கம்போடியா முதலியவற்றிலிருந்து இறக்குமதி செய்வதில் தாமதம் செய்ததினல் 1961-ம் ஆண்டின் முற்பாகத்திலுள்ள அரிசி ஏற்றுமதிசென்றவருடத்திலும்குறைந்தது. பர்மாவிலிருந்து அரிசி ஏற்றுமதி பெப்ரவரியில் 91,500 தொன்களுக்கு விருத்தியடைந்தது. இலங்கை, பாகிஸ்தான், இந்தியா ஆகிய இடங்களிலுள்ள ஏற்றுமதி விருத்தி சீனவிலும் பார்க்க மேலோங்குகிறது.

### தென்வியட்னும் தாய்லந்து

வருடத்தின் முதல் இரு மாதங்களின் பர்மாவின் ஏற்றுமதி 149,000 தொன்கள் மொத்தமாக இருந்தது. இந்தியா ஏற்றுமதியில் பத்திலொன்று குறைக்கப்பட்டதோடு இலங்கை ஏற்றுமதியிலும் தாமதமாயிற்று.

தென்வியட்னுமின் ஜனவரி ஏற்றுமதி மொத்தமாக 10,900 தொன்கள் இலங்கையில் இறக்கப்பட்டன. தாய்லந்தின் ஏற்றுமதி 1960-ம் ஆண்டிலும் பார்க்க இருமடங்காக கப்பல் போக்குவரத்து தாமதமில்லாததால் 618,300 தொன்கள் முதல் நான்கு மாதங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கியூபா, சீன உடன்படிக்கையின் முடிவாக 20,000 தொன்கள் பர்மாவிலிருந்து மே மாதக் கடைசியில் கியூபாவிற்கு அனுப்பப்பட்டதென்று அறிவிக்கப்பட்டது. இலங்கைக்கு 1961-ம் ஆண்டில் 200,000 தொன்கள் சீனவால் அனுப்பப்படும். இவ்வேற்றுமதி பர்மாவிலிருந்து பரிமாறப்படும் என்று சஞ்சிகை கூறுகிறது.

---

## இ. போ. ச. நேரதாமதத்தைத் தடுக்க

### புதிய உத்தியோகஸ்தர் குழு நியமனம்

கொழும்பு, செவ்வாய்

நேர அட்டவணையின்படிபஸ் சேவையை நடத்தாமல் பிரயாணிகளுக்கு அசௌகரியம் உண்டாக்கும் சாரதிகளின்மேல் நடவடிக்கை எடுப்பதற்கு திடீர் பரிசோதனை செய்யும் உத்தியோகஸ்தர்குழு ஒன்றை இலங்கைப் போக்குவரத்துச் சபை நியமிக்கவிருக்கிறது.

நேரத்துக்கு பஸ் ஓடாத சாரதிகளின்மேல் வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி பிராந்திய மனேஜர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

புதிதாக நியமிக்கப்படவிருக்கும் குழு போக்குவரத்து வேலைகளோடு வருமானம் சம்பந்தமான விஷயங்களையும் கவனிக்கும்.

## சிறு கைத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்க திட்டம்

கொழும்பு, செவ்வாய்

ஜாஎலயில் இவ்வருட இறுதியில் ஆரம்பிக்கவிருக்கும் சிறு கைத்தொழில் திட்டம் வெற்றிகரமாக அமையுமானல் இது போன்ற பல சிறு கைத்தொழில் திட்டங்களை இலங்கை முற்றிலும் செயல்படுத்த சிறு கைத்தொழில் கார்ப்பரேஷன் முயற்சி செய்யும்.

இவ்வருட இறுதியிலிருந்து, ஜாஎல தோட்ட சிறு கைத்தொழில் திட்டத்தில் பங்குகொண்டு உழைப்பதற்காக சிறு கைத்தொழில் அதிபர்கள் சேர்க்கப்படுவர். ஏற்கனவே பல சிறு கைத்தொழில் அதிபர்கள் ஜாஎல தோட்டத்தல் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக தமக்கு இடம் ஒதுக்கித்தருமாறு கார்ப்பரேஷனைக் கேட்டுள்ளார்கள்

ஜாஎலயில் சகல வசதிகளும் அளிக்கப்படுவதால், தமது பகுதியில் கைத்தொழில்களை ஆரம்பித்து நடத்த போதிய பணமும் வசதியுமற்றவர்கள் இங்கு கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பார்களெனத் தெரிகிறது.


**கிங்ஸ்லி பிளாஸா வெம்பிளி**

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி)



**பிரேம் நஸீர், ராகினி, வீரப்பா, எம். என். ராஜம், ஸி. ஆர். ராஜகோபால் நடித்த**

**இருமனம் கலந்தால் திருமணம்**

பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எஸ். ஸி. கிருஷ்ணன், ராகவன், ஜமுனராணி.

---

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5- 5 மணிக்கு மட்டும்

சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-15 மணிக்கும்

1-7-61 முதல்

**சிவாஜி கணேசன் — பத்மினி** நடித்த

**அமரதீபம்**

---

**மனேஹரா** (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்

**ஜெமினி கணேசன், சாவித்திரி** நடித்த

**அதிசயத் திருடன்**

---

**Sons and Lovers**

(Adults only)

**சன்ஸ் அன்ட் லவர்ஸ்**

(வயது வந்தவர்களுக்குமட்டும்)

பிற்பகல் 2, 3-45 சனி, ஞாயிறு காலை 10-30

---

வெகுவிரைவில்

சினிமாஸ் திரைகளில்

**ஜெமினி கணேசன்–பத்மினி தங்கவேலு** மற்றும் பலர் நடித்த

மதுரம் பிக்சர்ஸாரின்

**மீண்ட சொர்க்கம்**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜுலை மாதம் 5-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது